# ஜகன்மோகினி

ஜீவிய சந்தா ரூ. 50

வருஷ சந்தா ரூ. 3

தனிப் பிரதி அணு 4


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு — திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Vol. 22. No. 5. பார்த்திப சித்திரை May 1945



18310 சென்னை


மேல் அட்டைப் படம்: "அன்னம் பஹுகுர்வீத"

## திருமகள் வணக்கம்

ராகம்-காம்போதி — ஸ்ரீ சுத்தானந்த பாரதி — தாளம்-ரூபகம்

சீர்பெருக, செயம்பெருகத்
திருமகளைப் பணிவோம்.
ஊர்பெருகும் பேர்பெருகும்,
ஓங்கு நலம் பெருகும்

காலையிளம் பரிதியிலே
கனகமுகங் காண்போம்,
மாலைவளர் முல்லையிலே
மணிமுறுவல்காண்போம் (சீர்)

அழகினிலே கொலுவிருப்பாள்
அன்னை பரா சக்தி
பழகும் இளங் காதலர்க்குப்
பாக்கியங்கள் தருவாள். (சீர்)

வேண்டுமன்பர் வீடுகளில்
விளங்கி வளந் தருவாள்
தூண்டுசுடர் போலெதிரே
துலங்கி யருள் புரிவாள் (சீர்)

கள்ளமில்லாத் தொண்ட ருக்குக்
கைநிரம்பக் கனகம்
அள்ளி யள்ளித் தந்திடுவாள்
அமுதமழை பொழிவாள். (சீர்)

வறுமை யெனும் பேய் ஒழிய
வாழ்வுசெழித் திடவே,
சிறுமையெல்லாந் தீர்த்திடுவாள்
சிறந்த புகழ் ஈவாள். (சீர்)

வெற்றி தரும் சக்தி யிவள்
வேண்டிப் பணிந் திடுவோம்,
பெற்றவரின் அன்புமிக்காள்
பெண்சக்தி வாழ்க! (சீர்)

---

திருமகளின் திரு உருவமும், முன்னே மணிவிளக்கும் இவ்விதழின் மேலட்டையை அலங்கரிக்கின்றன. குடும்பம் நடப்பதற்கும் கல்விகற்பதற்கும் ஆதாரமாகிய செல்வம் பெறச் செல்வியை வணங்குவது வேண்டும். அன்னம் பஹுகுர்வீத—நிரம்ப அன்னாதி திரவ்யங்களைச் சம்பாதி. அதற்கு மஹாலக்ஷ்மி உபாஸனைசெய் என்று வேதம் சொல்லும். ஸ்ரீபாஷ்யத்திலும் ஸ்ரீராமானுஜர் மஹாலக்ஷ்மியைச் சிறப்பித்தார்.

ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி

# சிறுமையும் பெருமையும்

லோகோபகாரமான பல அரிய கிரந்தங்களை இயற்றி வருபவரும், சதா சர்வதா ஸத்கதாகாலக்ஷேபம் செய்துவருபவருமான ஸ்ரீவைஷ்ணவ திலகம் ஸ்ரீ காஞ்சீ ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி மோகினி வாசகரிடம் அளவற்ற அன்பு கொண்டு சென்ற இரண்டு ஆண்டு மலர்களில் அரிய விஷயதானம் செய்தார். பார்த்திபஹு செய்த பாக்யம் மோகினி ஒவ்வொரு இதழிலும் அவரது இனிய எளிய வியாசம் பிரகாசிக்கும். "ஆகாசப் பந்தலாகவும் விகடமாகவும் எழுத ருசியில்லை. எக்காலத்திலும் எடுத்து வாசித்து இன்புறக்கூடிய தத்துவ விஷயமான வியாசங்களையே அனுப்புவேன்" என்ற பீடிகையுடன் அருளியிருக்கிறார் இந்தத் தொடரை. படித்துப் பயன்பெறுங்கள்.

வை. மு. ஸ்ரீ.

கூரத்தாழ்வான் ஒருவர்க்குத் திருவாய்மொழி சந்தை சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது திருக்குமாரரான பட்டரும் மிகச் சிறு பிராயத்தளவிலே கூடவே உட்கார்ந்து கொண்டிருந்தார். திருவாய்மொழியில் எட்டாம் பத்தில் *நெடுமாற்கடிமை யென்கிற கடைசி திருவாய்மொழி (பதிகம்) சந்தையாகிறது. அதில் *உறுமோ பாவியேனுக்கு* என்கிற மூன்றும் பாசுரத்தில் *சிறு மா மனிசராயென்னை யாண்டா ரிங்கே திரியவே* என்கிற அடி சந்தையாமளவில் பட்டர் கேட்டு, அதில் 'சிறுமா மனிசர்' என்றதைக் குறித்து ஆக்ஷேபங்கொண்டு, ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை யென்கிற குணங்களிரண்டும் ஒரு பொருளினிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? ஆழ்வார் "சிறு மா மனிசர்" என்று சிறுமை பெருமையாகிய இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளிச் செய்திருக்கிறாரே, இது பொருந்துவது எங்ஙனே? என்று திருத் தந்தையாரை வினவினார்.

இந்த சங்கை வயது முதிர்ந்த வித்வான்களுக்கும் தோன்றக் கூடியதன்று. ஆழ்வார் திருக் குமாரராகையாலே பட்டர்க்கு இது சிறு பிராயத்திலேயே தோன்றிற்று. அதற்கு ஆழ்வான் ஆலோசித்து, 'பிள்ளாய்! நன்கு வினவினாய்; உனக்கு உபநயனமாகாமையால் இப்போது வேத சாஸ்த்ரங்களைக் கொண்டு விடை சொல்லலாகாது. ஆகிலும் ப்ரத்யக்ஷத்திற் காட்டுகிறேம் காண்' என்று சொல்லிச் சில பெரியார்களைக் காட்டி 'திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கிற சிறியாச்சான் அருளாளப் பெருமாளெம்பெருமானார் போல்வாரைச் சிறுமாமனிசர் என்னத் தட்டில்லையே. முதலியாண்டான் எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அந்நபாநாதிகள் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதில் பரமபதத்து நித்யஸூரிகளைப் போலுதலால் இப்படிப் பட்டவர்கள் சிறுமாமனிசரென்னத் தக்கவரன்றோ? இங்ஙனமே வடிவு சிறுத்து மஹிமை பெருத்தவர்களும், மனிதரென்று பார்க்கும் போது சிறுமை தோன்றினும், பகவத்பக்தி ஞானம் அனுட்டானம் முதலிய நற்குணங்களை நோக்குமளவில் நித்ய முக்தர்களினும் மேன்மை பெற்று விளங்குகிறவர்களுமான மஹாபுருஷர்களையே ஆழ்வார் சிறு மா மனிசரென்று குறித்தருளினர்' என்றருளிச் செய்ய, அது கேட்டு பட்டர் "தகும் தகும்" என இசைவு கொண்டனர். "மிகு ஞானச் சிறு குழவி" என்ற திருவாய்மொழிப் பாசுரமும் இங்கே நினைக்கத்தக்கது.

யோகி சுத்தானந்த பாரதி

# கவியின் உரிமை

ஷெல்லி புரட்சிக்கவிகளில் புகழ் பெற்றவன் — அவன் காலத்திலன்று; பிற்காலம். ஷெல்லி இலட்சியக்கவி; உள்ளக் கனவைச் சொல்லிசையாக்கி, உலகையே தன் கனவுச் சிற்பமாக்க முயன்றவன்.

ஆனால் அக்காலம் அவனை அறியவில்லை: தன் புதுமைக் கொள்கைக்காக ஷெல்லி எத்தனையோ இடர்களைப் பொறுத்தான். ஷெல்லியின் கவிகளில் எனக்கு மிகவும் பிடித்தது The Revolt of Islam (இஸ்லாம் புரட்சி) அதன் முன்னுரையில் அவன் இவ்வாறு எழுதுகிறான் :—

தற்காலத்தில் உள்ள எந்தக் கவியுடனும் நான் போட்டிபோட விரும்பவில்லை; முற்காலக் கவிகள் வழியே செல்லவும் எனக்குப் பிரியமில்லை. நான் எந்தக் கவியின் நடையையும், கருத்தையும் அபிநயிக்கமாட்டேன். என் கவி இக்காலத்திற்குப் பிடிக்காமற் போனாலும் பரவாயில்லை; அது உதவாக் கரைக் கவியானாலும் பாதகமில்லை; அந்தக் கவி என் சொந்தக் கவியாயிருக்கவேண்டும்; அதுவே என்விருப்பம். நான் பரம்பரை விதிகளால் என் வாக்கை அளவு பிடித்து அமைக்கவில்லை: என்னுள் உதித்த எண்ணங்களுக்கு எனக்குத் தோன்றிய சொல்லுடை அணிவித்திருக்கிறேன். கவிக்கென்று ஒரு தனிக் கல்வியுண்டு.

(There is an education peculiarly fitted to a Poet)

நான் குழந்தைமுதல் மலை, ஆறு, கடல், நதி, காடுகளில் திரிந்து, இயற்கையில் தவழ்ந்த சிந்தனைப்பித்தன். ஆதலால் எனது கவியும் இயற்கையின் சொல்வடிவே. நான் நாடு நகரங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். பெரிய புலவர் நூல்களையும் படித்திருக்கிறேன். ஆனால் என் கவிதை என்னுள்ளத்தில் ஊறி வந்ததே. ஷேக்ஸ்பியர், மில்டன், ஓமர் முதலியோர் கவியும் அம்மாதிரியே. இக்காலத்தவர் என்னை மதிக்காதுபோனால் பரவாயில்லை; பலர் என் கவிதையைத் தூற்றிக் குறைகூறுவதைக்கேட்கிறேன்; எதிரிகளின் கேலியும் இடர்களும் என் மனச்சாட்சியை ஒன்றும் செய்யமுடியாது. அவர்களைக் கண்டு நான் இரங்குகிறேன்; என் கடமையை இன்னும் அமைதியாக நிறைவேற்றுகிறேன்''— உண்மையான கவியின் நெஞ்சுரத்தையே ஷெல்லி விளக்குகிறான். கவிகள் அஞ்சாச் சுதந்தர வீரராவார்.

பேகன் உலக மேதாவிகளில் சிறந்தவன். அறிவே ஆற்றல் (Knowledge is power) என்று அவன் போதித்து மக்களின் உள்ளறிவையும் உலகறிவையும் தூண்டினான். பதினேழாவது நூற்றாண்டில் பிரான்ஸிஸ்பேகன் ''ஸயன்ஸை வளருங்கள், அறிவைப் போற்றுங்கள்; அறிவே மனிதன்; ஸயன்ஸே மனிதநாகரிகத்தை ஆளப்போகிறது' என்றான். அக்காலம் பேகனை அறியவில்லை; அவன் செல்வச்சலுகையிலிருந்து சிறையிருளில் அடைபட்டழிந்தான். அவன் எழுதிய "The new Atlantis" என்ற அரிய நூலை நேற்றுவரையில் யாரும் விரும்பிப் படிக்கவில்லை; அந்நூலை H. G.

வெல்ஸ் என்ற மேதாவி படித்து வியந்து, "இந்நூலால் பேகன் அறிவுலகிற்குப் பெரும் பணிசெய்தான்" என்றார். இப்போதுதான் அந்த நூலை உலகம் போற்றுகிறது. பேகன் புகழைத் தேடவில்லை; "என் கடமையை இதோ செய்து முடித்தேன்; என் உயிரை இறைவனுக்கே அர்ப்பணிக்கிறேன்; என் உடல் மண்ணில் புதைந்தொழியும்; பிறகு அதை யாரும் தேடமாட்டார். என் பெயர் இந்தக்கால இருளில் மறையலாம்; வருங்காலத்திற்கும் இனிவரும் மனித சமுதாயத்திற்கும் என் பெயரை அறிவின் வடிவாகத் தருகிறேன்" என்றான் பேகன். பேகன் வாக்கு இன்று நிறைவேறி வருகிறது. அவன் கண்ட விஞ்ஞான—மானதம் (Scientific Humanism) இனித்தான் நிறைவேறவேண்டும்; அது நிறைவேறினால் அசுரப்போர்களில்லாமல் ஸயன்ஸ், மனித நாகரிகத்தை வளர்க்கும்.

இந்தமாதிரி மகா மேதாவிகள் தங்கள் கடமை என்றுணர்ந்ததைப் பிறர் இசை வசைகளைப் பொருட்படுத்தாமற் செய்து சென்றார்கள்.

கவிகளின் கடமை மிகப் பெரிது; அவர்கள் புதிய சகாப்தத்தை உண்டாக்குகிறார்கள். உலகில் புது மலர்ச்சி உண்டாகும்போதெல்லாம் ஒரு கவி தோன்றுகிறான். நமது பாரததேசம் வேத ஞானத்தை மறந்து, போலித்துறவினால் மெலிந்து வாழ்வை வெறுத்திருந்த சமயமே காளிதாஸன் தோன்றி, கலையும் காதலும் வீரமும்செறிந்து வாழும் வகையைத் தனது வாக்கினால் விளக்கினான். அதே காரியத்தைக் கம்பன் தமிழகத்திற் செய்தான்.

புதுமலர்ச்சிக் கவிகள் புதிய எண்ணங்களுடன் புதிய வாக்கையும், புதிய கலைகளையும், புதிய சந்தங்களையும் கொண்டு வருகிறார்கள். வங்காளத்தில் தாகூர் அவ்வாறே செய்து உலகப் புகழ்பெற்றார். அவர் கவிகள்ருக்வேதம்உபநிஷத்துஆகிய இரண்டிலும் ஊறி மலர்ந்தவை. எனினும், ரஸனையும் உவமையும் சந்தமும் தாகூரின் சொந்தமேயாம்.

தமிழிலும் வடமொழியிலும் எத்தனையோ இனிய சந்தங்கள் உள்ளன. உலகில்வேறெந்தமொழியிலும் இவ்வளவு இனிய சந்தச் செல்வம் இல்லை. உண்மைக் கவி பழைய அச்சிலேயே தன் வாக்கை வார்க்க வேண்டியதில்லை; பழைய தேமா புளிமாவுடன் புதியதேனமுதச்சுவைகளையும் கூட்டிப் புதிய கவிதை செய்ய அவனுக்கு உரிமையுண்டு, பழைய கட்டி மாம்பழத்துடன் ஒட்டுமாம்பழத்தையும் உண்ணத் தடையென்ன? அருணகிரிநாதர் அண்ணமலை ரெட்டியார், பிள்ளைப் பெருமாள், வில்லிபுத்தூரர், நம்மாழ்வார், சம்பந்தர், சங்கரர் முதலிய மகான்கள் எத்தனையோ புதிய சந்தங்களை உண்டாக்கி அரிய கவிகளைச் செய்திருக்கிறார்கள். பழைய வெண்பா விருத்த ஒழுங்குகளுடன் இனி வரும் கவிகள் புதிய புதிய சந்தங்களை உள்ளிருந்துகொண்டுவர வேண்டும். தாகூர் அப்படியே ஆக்கி வங்கப்பாட்டை ஆங்கிலச் செவிகளுக்கும் இனிதொலிக்கச் செய்தார். கலை தெரிந்த கவிக்குக் கட்டின்றிப் புதியகவியிசைக்க உரிமையுண்டு. நியூடனுக்கும் கலிலியோவிற்கும் பாரடேக்கும் புதிய புதிய இயற்கையுண்மைகளைக் காணும் உரிமையுண்டு; அதுபோலவே நல்லகவிகளுக்கும் புதிய இசையின்பம் இயக்கும் உரிமையுண்டு; இந்த உரிமையை எந்த நாட்டில் பெரியார்கள் கொண்டாடினார்கள், நாம் எம்மட்டில் அனுசரிக்கலாம் என்பதை அடுத்த மோகினியில் விளக்கலாம்—

பி. ஸ்ரீ

# ஜைன பௌத்தர் ஏற்றிய சன்மார்க்க தீபம்

கிறிஸ்து பிறக்க 599 வருஷங்களுக்கு முன் மஹாவீரர் என்ற பெரியார் ஒருவர் ராஜகுலத்திலே தோன்றினர். எனினும் க்ஷத்திரிய வீரராகப் புகழ்பெருமல் ஞான வீரராகப் பேர் பெற்றுர். உண்மையில் ஞானவீரம்தானே வீரம்?

இவர் தமக்கு 30 வயதானதும் துறவியானுர். சுமார் நாற்பத்திரண்டு வயதானதும் உயர்ந்த ஞானத்தையும் சிறந்த வெற்றியையும் அடைந்தாராம். வெற்றி அடைந்ததால் இவரை ஜினன் என்றும் சொல்லுகிருர்கள். இவர் முப்பது வருஷங்களாக மகதநாடு, விதேஹநாடு, கோசலநாடு ஆகிய பிரதேசங்களில் சஞ்சரித்துப் பல சிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டார்.

இப் பெரியார், தாழ்ந்த வகுப்பினர்களும் மிலேச்சர்களும் கூட மோக்ஷம் என்ற விடுதலையைப் பெறலாம் என்று உபதேசித்தார். இவருடைய ஸன்மார்க்க வழி கடுமையானது. சிந்தனையிலும் பாவம் கூடாது என்றுர். உயிர்ப்பிராணி ஒன்றையும் ஹிம்ஸிக்கக் கூடாது என்று பிரசாரம் செய்தார். செயலில் மட்டுமல்ல, பேச்சிலும் அஹிம்ஸா தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும்என்று வற்புறுத்தினர். இப்பெரியாரை—ஒரு துளி ரத்தம் சிந்தாமல் வெற்றிபெற வழிகாட்டிய வீரரை—மஹா வீரர் என்று சொல்வது எவ்வளவு பொருத்தமானது!

* * * *



மஹாவீரர் ஏற்றிவைத்த ஸன்மார்க்க விளக்கைத்தான் ஜைன மதம் என்கிருர்கள். ஜைன மதத்தைச் சமண மதம் என்றும் சொல்வதுண்டு. நம் தமிழ்நாட்டிலும் ஒரு காலத்தில் சமணர்கள் ஏராளமாகக் காணப்பட்டார்கள். திருஞான சம்பந்தர் என்ற சிவநேசத் தலைவர் வாழ்ந்தகாலத்தில் ஜைனர்கள் கழுவேறியதாகவும், சைவம் சமண மதத்தை வென்றுவிட்டதாகவும் பெரிய புராணம் என்ற தமிழ்நூல் தெரிவிக்கிறது. சங்கராசாரியரும் ஜைனமதத்தை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.



பிராம்மணர்களின் சில கொள்கைகளை ஜைனர்கள் எதிர்த்துவந்த போதிலும், ஜைனம் ஹிந்துமதத்திற்கு ஒருபோதும் பிரமாதமான சத்துரு ஆகிவிடவில்லை. ஜைனர்கள் சாதுக்கள்; தங்கள் கொள்கைகளைப் பரப்புவதிலும் சாந்தமான முறைகளையே கையாண்டார்கள்.

இன்றும் சிறு தொகையினராக ஜைனர்களை நம் தேசத்தில் பார்க்கலாம். ஸாராம்சமான கொள்கைகளில் இவர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் அதிக வித்தியாசம் கிடையாது. மேலும் ஜைன சமயத்தின் ஸாரமான கொள்கைகளையெல்லாம் காளடைவில் ஹிந்துக்கள் அங்கிகரித்துக்கொண்டார்கள்.

"தயாமூல தர்மம்" என்ற ஜைன அஹிம்ஸைக் கொள்கையை அப்பர் ஸ்வாமி என்ற சிவநேசச் செல்வர் அங்கீகரித்துக்கொண்டார். வைஷ்ணவ சமயத்திலும் ஜைனச் சுவடுகளைப் பார்க்கலாம்.

ஜைனமதம் இன்று ஜனத் தொகையில் குறுகிப்போய் விட்டது என்பது உண்மைதான்; எனினும் ஹிந்து மதத்தின் ஹிருதயத்தில் புகுந்து ஹிமாலயம்முதல் கன்னியாகுமரிவரை வியாபகம் அடைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

* * * *

மஹாவீரருக்குப்பின் அஹிம்ஸா தர்மக் கொள்கையை வற்புறுத்திப் பிரசாரம் செய்தவர் புத்தர்பெரு

மான். மஹாவீரரின் பெயரைக் காட்டிலும் புத்தரின்பெயர் பிரசித்த மாகிவிட்டது. இன்றும் எச். ஜி. வெல்ஸ் முதலான பேரறிஞர்களால் உலகப் பிரசித்தி பெற்றவராக அங்கீகரிக்கப்படுகிறவர் புத்தர்பெருமான். புத்த சரித்திரம் பிரசித்தமாகப் பள்ளிக்கூட மாணுக்கர்களுக்கும் தெரிந்ததுதான். புத்தர் என்ற பெயரே 'புத்தி அல்லது ஞானத் தெளிவில் இவர் சிறந்து விளங்கினர்' என்பதை வெளியிடுகிறது.

மஹாவீரர் சுமார் முப்பது வருஷம் தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்துவந்தார். புத்தர் 42 வருஷகாலம் காசி முதலான பிரதேசங்களில் பிரசாரம்செய்து சிஷ்ய சம்பத்தைப் பெருக்கிக் கொண்டார். இவர் சாமானிய ஜனங்கள் பேசும் பிராகிருத பாஷையில் தமது கொள்கைகளை வெளியிட்டு எத்தனையோ உள்ளங்களுக்குச் சாந்தியளித்தார். பெரிய பெரிய அரசர்களோடு ஏழை மக்களையும் ஸமதிருஷ்டியோடு நோக்கியது புத்தரின் சமதர்மம்.

புத்தரும் மஹாவீரரைப்போல் அஹிம்ஸா தர்மத்தை வற்புறுத்தியதோடு யாகங்களில் உயிர்க்கொலை செய்வதை விசேஷமாய்க் கண்டித்தார். பாகசாலையிலும் யாகசாலையிலும் உயிர்க்கொலை கூடாது என்பது புத்தர் உபதேசம்.

புத்தருடைய செல்வாக்கு மஹாவீரருடைய செல்வாக்கைக் காட்டிலும் அதிகமாகி விட்டது. ஜாதி பேதங்களைப் புத்தர் கண்டித்தது போல் மஹாவீரர் கண்டிக்கவில்லை.

எனினும் பௌத்தமதமும் ஜைனமதத்தைப்போல் ஹிந்து மதத்திலிருந்து கிளைத்தெழுந்ததுதான். பௌத்தமதத்தின் ஸாரமான கொள்கைகளையும் ஹிந்துமதம் ஸ்வீகரித்துக்கொண்டது.

பௌத்தமதத்தைப் பரப்புவதில் அசோக சக்ரவர்த்தி ஈடுபட்டிருந்ததைப்போல் ஜைனத்தைப் பரப்புவதில் இவ்வளவு பெரிய சக்தி தொழிற்பட்டதென்று சொல்லமுடியாது. அசோக சக்ரவர்த்தியின் முயற்சியினால்தான் பௌத்தமதம் இலங்கை சீன முதலான இடங்களிலெல்லாம் பரவியது. இன்று தன் ஜன்மபூமியில் பௌத்தமதம்காணப்படவில்லை என்பது உண்மைதான், ஆனல் இந்தியாவின் நன்கொடையாக இலங்கை சீன முதலிய தேசங்கள் அடைந்திருக்கும் நன்மைகளை அளவிட முடியாது.

இந்தியாவில் புத்தமதம் இல்லையென்றாலும், ஹிந்துமதத்தோடு புத்தமதம் இரண்டறக் கலந்துவிட்டது என்றே சொல்லவேண்டும். புத்தரை மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவராகவும் நமது ஜனங்கள் கருதுகிறார்கள் அல்லவா?

* * * *

ஜைன பௌத்தஸ்தாபகர்களான மஹாவீரரும் புத்தரும் ஏற்றிவைத்த ஸன்மார்க்கதீபம் இன்றும் அணைந்து போகவில்லை. யுத்த ஆவேசங்களுக்குப் பின் உலக அறிவாளர்களின் சிந்தனைகள் மீண்டும் இந்த ஸன்மார்க்க தீபத்திலிருந்து ஒளி பெறக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

---


## மோகினியில் புதிய விருந்து: பெண்மை விளக்கம்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் இதுகாறும் கவிக்கலையைப்பற்றி அரிய கட்டுரைகள் எழுதி வந்தார்; அக்கட்டுரைத் தொகுதி அடுத்த மோகினியுடன் பூர்த்தியாகிறது. ஆனி இதழிலிருந்து சுவாமிகள் பெண்மை-விளக்கம் என்ற அரிய கட்டுரைகள் எழுதுவார். அத்தொகுதியில் வேதத்திற்கும் காலதர்மத்திற்கும் பொருத்தமான ஸ்திரீதருமம், பெண்களின் பெருமை, சக்திபூஜை, சைவ வைஷ்ணவதாந்த்ர யோக ரகசியங்கள், ஹிந்து சமுதாயத்தில் ஸ்திரீகளின் சேவை, உலகில் புகழ்பெற்ற பெண்மணிகளின் வரலாறு, இல்லறப் பாடல்கள் முதலியவை படப்பொலிவுடன் தொடர்ந்து வரும்.

ஆசிரியை.



# பெரியாழ்வாரின் வாத்ஸல்யபாவனாதிசயம்

## கண்ணன் திருஅவதாரச் சிறப்பு

ஓடுவார்விழுவார் உகந்தாலிப்பார்
நாடுவார்நம்பிரான் எங்குற்றானென்பார்
பாடுவார்களும் பல்பறைகொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.

பெரியாழ்வார் திருமொழி.

முதற் பத்து. 3.




அஞ்சிலேயொன்று பெற்றானஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலேயொன் றாறாக வாரியர்க்காகவேகி
அஞ்சிலேயொன்று பெற்ற வணங்கைக்கண்டயலாரூரில்
அஞ்சிலேயொன்றை வைத்தானவனெம்மையளித்துக்காப்பான்.

ஹனுமார் அஞ்சிலே ஒன்றான கடலைத் தாவல், பூமகளான சீதையை அசோக வனத்திற்காணல், கணையாழி தரல், இலங்கையில் தீ வைத்தல், மீண்டும் வந்து திருவடி வணங்கல் ஆகிய காட்சிகளைச் சித்திரிக்கிறது இந்த ஓவியம்.



24 ... 1945

# மதமா, மனமா?

வை.மு.ஸ்ரீ

## 5. சோகமும் வேகமும்

சோகச்சிகரத்தில் தவித்துருகும் பேதைகளின் மனோவேதனையின் வேகத்தை வர்ணித்திடுதல் சாத்தியமோ? உள்ளச் சோர்வின் பலனால், கண்ணெதிரிலிருப்பதும் தெரியாது; அருகே சொல்வதும் காதில் விழாது; தெரிந்ததும் மறந்துவிடும், புத்தி பேதித்துவிடுவதால் நல்லது—கெட்டது என்ற வித்யாசமும், சரி—தப்பு என்ற வித்யாசமும், இப்படியும் சொல்லலாமா—கூடாதா என்ற யோசனையும் அறவே மறந்துபோய் மனம் நிலையற்று தத்தளிப்பதை நாம் பிரத்யக்ஷமாகக் காணவில்லையா?

தாங்கமுடியாத அதிர்ச்சியின் பலனால் சோகச் சுழலில் சிக்கியவர்களுக்கு நிலைதடுமாறி நாஸ்திக வாதம் கூடத் தோன்றிவிடுகிறதல்லவா? ''கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் ஏன் இத்தகைய ஒரு சோதனையைச் செய்து எங்களைத் துன்புறுத்தவேண்டும்? பக்திக்குப் பலன் இத்தகைய கதிதானா? கடவுள் கண்மூடிக் கடவுள்தானே, அல்லது கடவுளே இல்லையோ?'' என்றெல்லாம் நாஸ்திகவாதம் தோன்றுவதை அதிர்ச்சியால் தாக்கப்பட்ட ஆஸ்திகரிடையே நானே நேரில் கண்டிருக்கிறேன்.

சோகத்தின் ஆழமும் வேதனையின் வேகமும் காளியம்மாவையும் மாரியம்மாவையும் உருமாறச் செய்ததில் ஆச்சரியமென்ன? ''என் தந்தையின் பக்திக்கு நாராயணன் கொடுத்த கூலி இதுதானா?'' என்று மாரி புலம்பினாள். ''மதத்தின் பெயரைச் சாக்கிட்டு மன இரக்கமின்றி பெரிய பண்ணை ஐயர் உனக்குச் செய்த கொடுமையைச் சகிக்காது தான்—அந்த அதிர்ச்சியிலேயே—இறந்துவிட்டார் உன் தந்தை'' என்று ஆத்திரத்துடன் அலறினாள் காளி. இருவருடைய மனக்குழப்பத்தின் பரஸ்பர எதிரொலி இத்தகையக் குற்றச்சாட்டுகள்தான். ''கடவுளை நொந்துகொள்வதிலோ கோபிநாத சாஸ்திரிகள்மீது கோபப்படுவதிலோ என்ன பிரயோஜனம்? விதி யாரை விட்டது?'' என்ற சிந்தனையே எழவில்லை!

* * * *

கலங்கிய உள்ளமும் கடின கால க்ஷேபமும் அவர்களது வாழ்க்கையின் நிழலாக அமைந்தன. தாயும் மகளும் கூலிவேலைசெய்து கஷ்ட-

ஜீவனம் செய்யலானுர்கள். நிரந்தரமான வேலை எதுவும் அகப்படாததால் கிடைத்த வேலையெல்லாம் செய்துவந்து கடைசியில் கட்டட வேலையில் சாமான்களெடுத்துக் கொடுக்கும் சிற்றுள் வேலை செய்யவும் முன்வந்தார்கள். கண்ட்ராக்டர் கண்ணியதாஸ் நல்லவேளையில்தான் இவர்களைத் தன் ஊழிய கோஷ்டியில் சேர்த்திருக்கவேண்டும்: இல்லாவிட்டால் அந்தத் தொழிலில் எப்படி இவ்விருவருக்கும் வெகு விரைவிலேயே ஒரு சகிப்பும் பிடிப்பும் ஏற்படும்?

மாரி பகல் முழுதும் வேலை செய்வதும் இரவில் இராப்பள்ளிக்கூடத்தில் இதர வேலைக்காரர்களுடன் படிப்பதுமாக ஒருவித நிம்மதியான வாழ்க்கைப்பாதையில் அடியெடுத்து வைக்கலானுள். அவளது நிழலாகவே விளங்கினுள் விரக்தி நிறைந்த அவள் அன்னை. அந்தக் குலத்தினிடையே காணப்படும் ஓர் நிலையை விட பரிபக்குவமடைந்திருந்தனர் தாயும் மகளும் என்பது கண்ணியம் நிறைந்த கண்ணியதாஸுக்கு ஒரு பெருமையாயிருந்தது.

சேற்றிலும் சுண்ணும்பிலும் இளைந்து, கல்லையும் மண்ணையும் சுமந்து, "இது என்ன வாழ்க்கை!" என்று எண்ணுவதற்குப்பதிலாக "வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம் என்பது எப்பேர்ப்பட்ட உண்மை! மண்மீது தோன்றிய நாம் மண்ணுகத்தானே போகப் போகிறேம் கடைசியில்? வாழ்க்கையில் காணும் விசித்திர அனுபவங்களைத்தான் தினமும் உழைத்திடும் தொழிலிலும் காண்கிறேம். குழைத்துக்கூட்டிய மண், சுட்ட மண், சுட்டு வேகிய மண்கட்டி—இதெல்லாம் சேர்ந்து வீடு! மண்ணிலிருந்து கட்டடம் எழும்பும் ஒழுங்கும், இந்த வாழ்வின் அழகும் ஒன்றேதான்!" என்று தத்துவம் பேசலானுர்கள் தாயும் மகளும். "அழகான மாளிகையும் மண்ணிலானதுதான்; நாம் இருக்கும் குடிசையும் மண்ணே! கனவானின் முடிவும் மண்ணே! கசடனின் முடிவும் மண்ணே!" என்றெல்லாம் எண்ணி எண்ணி தங்கள் துக்கங்களை மறக்க முயன்றனர்.

* * * *

மேரிகுப்பம் என்றவூரில் மூன்று பங்களாக்கள் கட்ட கண்ணியதாஸ் ஒப்பந்தம் செய்துகொண்டதால் தன் சிப்பந்திகளுடன் அவ்வூருக்குப் பிரயாணமானுன். காளியும் மாரியும் கூடச்சென்றுர்கள். மேரிகுப்பத்திற்கும் காளியின் பிறந்த ஊருக்கும் வெகு சமீபமாகையால் காளிகிரி கிராமத்திலேயே தன் பழைய சினேகிதர்களுடன் வாசம் செய்துகொண்டு மேரிகுப்பத்திற்கு வேலைக்குச் சென்று வந்தார்கள். இவர்களது உறவினர் என்ற முறையில் ஒரு கிழவி தவிர வேறுஒருவருமில்லை அந்த கிராமத்தில். தங்களுக்குக் கிடைத்த கூலியிலேயே மூவரும் ஒன்றுகக் குடியிருந்தனர்.

இவ்வாறுக ஒரு வருடம் உருண்டோடியது. முதலில் கட்டிமுடித்த பங்களாவுக்குக் கல்லகன் துரை குடும்பத்தினர் குடிவந்தனர். மேரிகுப்பம் கான்வென்ட் ஸ்கூலின் பிரின்ஸிபாலான கல்லகனுக்கு அந்த ஊரில் மிகவும் நல்ல மதிப்பு இருந்தது. அவரது குழந்தைகளை வைத்துக்கொள்ள தாதியும், வீட்டுவேலை செய்ய வேலைக்காரியும், சமையலுக்கு பட்லரும் அமைத்துத்தரும்படி கண்ணியதாஸிடம் அவர் கேட்டுக்கொண்டதற்கு காளி, மாரி, சடையன் ஆகிய மூவரையும் சிபார்சு செய்தார்.

கண்ணியதாஸ் இவ்விஷயத்தை காளியிடம் பிரஸ்தாபித்தார். "உங்கள் குலத்தவர் சாதாரணமாக இம்மாதிரி வெளிநாட்டு பிற மதத்தினர் வீடுகளில் இத்தகைய வேலைகளுக்கு அமர்வது சகஜம். நம்ம சடையன்தான் பட்லராக ஒப்புக்கொள்ளப்போகிறான். அதனால் உங்களுக்குச் சாப்பாட்டுப் பிரச்னையும் தீர்ந்துவிடும். நீங்கள் துரைவீட்டோடு கிடந்து சுகமாக இருக்கலாம்" என்று விவரித்தார்.

"கல்லகன்துரை மிகவும் தங்கமானவர்தான், ஆனால் நம் வயிறை வளர்க்க எங்குவேண்டுமானாலும், யார் வீட்டில் வேண்டுமானாலும் வேலைசெய்யலாமா? மாரியம்மா! நீ பிறப்பதற்கு முன்னமே பிடித்து உன்தகப்பனாரும் நானும் என்ன சுத்தமான வாழ்க்கைநடத்தி—சுத்த சைவ உணவு உண்டு—வந்தோம் தெரியுமா? கண்ட்ராக்டர் ஐயா சொல்கிற வேலைக்குப்போனால்—வேறு மதத்தினர் வீட்டில்—எப்படி சரிப்படும்?" என்றாள் காளி கேட்டது மாரிக்கு முக்கியமாகப் படவில்லை.

"அம்மா! எல்லாம் மனம்தான் காரணம். அவர்கள் மதத்தைப்பற்றி நமக்கென்னவந்தது? நம் வேலையுண்டு நாம் உண்டு என்று குழந்தையைச் சுமந்து வீட்டைச் சுத்தமாகப் பார்த்துகொள்வதில் கஷ்டமென்ன? நமக்கு சாப்பாடு நம் குடிசையிலேயேதான். இதில் என்ன கஷ்டம்? பெரிய இடத்தில் வேலை கிடைப்பதே நமது பாக்கியம் என்று நினைக்காமல் ஏதோ புது பிரச்னையைக்கிளப்புகிறாயே!" என்று மாரியம்மா சொன்னதைக் கண்ணியதாஸ் ஆமோதித்தார். மாரியின் யோசனைப்படியே—அந்தத்திட சங்கல்பத்துடன்—கல்லகன்துரை வீட்டில் தாயும் மகளும் வேலைக்கு அமர்ந்தனர். வைராக்ய பிம்பங்களாக, காரியத்திலேயே கண்ணாக இருந்தனர்,


* * * *

ஒரு வருடத்திற்குள் அதிசயிக்கத் தக்க முறையில் மாரியின் புத்தி கூர்மையடைந்தது. அவளது பொது ஞானமும் பாஷாஞானமும் விருத்தியடையத் தொடங்கின. காளியம்மைக்கு இது பெரு மகிழ்ச்சியளித்ததெனினும், தகுந்த வயதையடைந்துள்ள தன் மகளுக்குச் சீக்கிரம் மணம் செய்விக்கவேண்டுமென்ற அவா அதிகரிக்கலாயிற்று. இவளுக்குத் தகுந்தபடி உயர்ந்த குண விசேஷத்துடன் எவன் அகப்படுவான் என்ற கவலையே காளியை வாட்டலாயிற்று. பலரிடம் சொல்லி, தேடலானாள்.

இப்படியிருக்க ஒரு நாள் காலை திடீரென்று மாரியைக் காணவில்லை. ஒரு க்ஷணமும் விட்டுப்பிரிந்தறியாத தன் அருமைத் தாயை விட்டு அவள் எங்கு மாயமாய் மறைந்திருக்கக் கூடும்? எதிர்பாராத இந்த அதிர்ச்சியை காளியால் சமாளிக்கவே முடியவில்லை. அவள் சோகமும், பெண்ணைக்குறித்தே பலவிதத்திலும் அலையும் மனோவேகமும் யார் மனத்தைத்தான் உருக்காது, பாவம்!

---

*மதமா, மனமா?* முதல் நான்கு அத்தியாயங்களும் பல படங்களுடன் வெளிவந்தன. இவ்விதழில் ஒரு படம்கூட வெளியிட இயலவில்லை. இதுவும் தவிர, ஸ்ரீ தியாகராஜர் கீர்த்தனையின் ஒவியமும் வெளியிடவில்லை. இதற்கெல்லாம் காரணம், வேண்டிய அளவில் குறித்த காலத்தில் *ப்ளாக்குகள் தயாராகாது* போனதினால்தான் என்பதை அன்பர்கள் கவனிக்கவும். அடுத்த இதழில் வழக்கம்போல்.



# பாசுரமும் ஓவியமும்

நான்காவது சித்திரம் பெரியாழ்வார் திருமொழி

சித்திர விளக்கம்—பூச்சூடல் 6-வது பாசுரம்

எருதுகளோடுபொருதி யேதுமுலோபாய்காண் நம்பி ★
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் ★
தெருவின் கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு ★
பொருதுவருகின்றபொன்னே புன்னைப்பூச்சூட்டவாராய்.

# அருளே பொருள், அன்பே துணை

அன்பு நிலயம் 1922ஆம் ஆண்டு தோன்றியது. அப்போது சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஒரு தேசியக் கலாசாலையில் ஸயன்ஸ் உபாத்தியாயராக யிருந்து கொண்டே, தம்மிடம் பற்றுக் கொண்ட மாணவர்களுக்கும் பிறருக்கும், தமது காவியங்களையும் வசன இலக்கியங்களையும் படித்து வந்தார். தேசியம், சன்மார்க்கம், யோகசாதனங்கள், இவற்றைக் குறித்து நாடோறும் இவர் பேசியதை மாணவர் குறிப்பெடுத்து எழுதித் தொகுத்த நூல்களும் சில உண்டு. உதாரணமாக, திருநூல் அப்படித் தொகுக்கப்பெற்றது. அடிகள் இரவில் தமது பாடல்களை இசைக்கருவிகளுடன் பாடி, ஆனந்தக்கூத்தாடி பக்தி சாதனம் செய்து வந்தார். அப்பாடல்களையும் அன்பர் எழுதிவைத்தனர். அன்பருடன் அடிகள் தமிழ், சன்மார்க்கம், சீவகாருண்யம், கிராமசேவை முதலிய துறைகளில் ஓயாமல் பணி செய்து வந்தார். நாளடைவில் அடிகளைச் சுற்றியிருந்த அன்பர் ஒரு நிலயங் காண விரும்பினர். அதற்கு நிலமும் வாங்க ஏற்பாடு செய்தனர். அந் நிலயத்திற்கு அன்பு நிலயம் என்று அடிகளே பெயரிட்டார்.

அன்பு நிலயம் சுமார் 20 அன்பர்களுடன் சிலகாலம் தேவகோட்டையில் நடந்துவந்தது. அடிகளின் கையெழுத்துப் பிரதிகளெல்லாம் அன்பர் சேர்த்து வெளியிடவும் விரும்பினர். அதற்குள் அடிகள், வீரமணி வ. வெ. சு. ஐயரின் அழைப்பிற்கிணங்கித் தமது வேலையையும் விட்டு சேர்மாதேவி குருகுலத்திற்குப் போய்ச்சேர்ந்தார். அடிகளின் நூல்களெல்லாம் தேவகோட்டையில் ஒரு அன்பர் வீட்டில் வைத்துச் சென்றூர். எல்லாம் மறைந்தன.

குருகுலத்தில் ஐயரின் அன்புப் பெருக்கால் அடிகள் ஏராளமான காவியங்களும், நாட்டுப்பாடல்களும், சமுதாயப்பாடல்களும், சரித்திரப்பாடல்களும், பாரத சக்தி, மகாகாவியம் புதிய பிரதியும், நாடகங்களும், நாவல்களும் கிதைகளும் எழுதிக் குவித்தார். ஐயருக்குப் பிறகு அடிகள், தமது இலக்கியச் செல்வத்தை ஒரு அன்பரிடம் ஒப்பித்துத் தஞ்சை சமரச போதினி ஆசிரியராகச் சிலகாலம் இருந்தார். சிலகாலம் கௌதம நிலயம், அற நிலயம், சக்தி நிலயம் முதலியன நாட்டிக் கிராமசேவை செய்தார். சிலகாலம் இயற்கைப் பத்திரிகையும் இயற்சிகிச்சைத் தொண்டும் செய்தார்! சீவகாருண்யப் பணி புரிந்தார். தமிழ் ஸ்வராஜ்யாப் பத்திரிகை ஆசிரியராகச் சிலகாலம் இருந்தார். பிறகு காங்கிரஸ் பிரசாரகராக ஊர்தோறும் சென்று நாட்டுப்பணி புரிந்தார். பிறகு அனைத்தையும் விட்டுக் காடுமலைகளிலும் மகான்கள் ஆசிரமங்களிலும் தவயோகம் புரிந்து, மோனத்திலேயே நிலைத்தார். இக்காலங்களில் இவர் எழுதிய பாடல்களும் வசன நூல்களும் அளவற்றன. அவற்றை அங்கங்கே அன்பரிடம் தந்துவிட்டு அடிகள் ஏகாங்கியாக, நாளைக் கவலையில்லாமல் நாடெங்கும் திரிந்தார். ஸ்ரீ ரமணரிஷிகளைக் கண்ட பிறகு திருவண்ணமலை விருபாக்ஷிக் குகையில் பத்து மாதங்கள் சமாதி நிட்டையிலிருந்து, அடிகள் ஸ்ரீ அரவிந்தாச்ரமத்திற்கு வந்து சதா மோனியாக நிலைத்தார். அதன் பிறகே அவருக்குத் தாம் எழுதிய

நூல்களின் நினைப்பு வந்தது. நினைப்பூட்டியவரும் அன்பரே.

இதற்குள் அடிகளிடம் உரிமை பூண்ட அன்பர் சிலர், அவர்கள் எழுதிய அரிய நூல்களைச் சேர்க்கத் தொடங்கினர். அடிகளும் சிலருக்குக் கடிதங்கள் எழுதினார். அவருள் பெருவாரியான கைப்பிரதிகள் வைத்திருந்த இரண்டு அரிய அன்பர் காலஞ்சென்றிருந்தனர். அவர் உறவினர் அடிகள் கையெழுத்துப் பிரதிகளையெல்லாம் என்னவோ செய்துவிட்டார்கள். கறையான் அரித்த சில பிரதிகளே கிடைத்தன. பல அரிய பாடல்கள் சிதள்கள் தின்ற மிச்சம் சிதைந்துபோய்க் கிடைத்தன. சிலர் தம்மிடம் இருந்த வசன நூல்களையும் பாடல்களையும் அனுப்பினர். அனைத்தும் அடிகளிடம் சென்று புதிதாக எழுதப் பெற்றன. மற்றும் அடிகள் மோனத்திலிருந்து ஏராளமான நூல்கள் எழுதினார். பாரதசக்தி மகா காவியத்தை அடிகள் மறுபடியும் நான்காவது தடவை புதுக்கி எழுதியுள்ளார். அதையே இப்போது காண்டம் காண்டமாகக் கருத்துரையுடன் நிலயம் வெளியிடத் தொடங்கி சித்தி காண்டம் வெளிவந்துள்ளது. அடிகள் நூல்கள் சுமார் 500 உள்ளன. அவற்றுள் இதுகாறும் 100 அன்பு மலர்கள் வெளியிட்டுள்ளோம், பிறரால் வெளிவந்தவை சுமார் நாற்பதிருக்கலாம். எல்லாம் சேர்ந்து 140 நூல்கள் இன்று அடிகள் பெயரால் உலாவுகின்றன. அடிகள் தமிழ் முன்னேற்றத்திற்கு வேண்டிய எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்துசென்று இலக்கியப்பணி செய்திருக்கிறார்கள். பெருங்காப்பியங்கள், இசைப்பாடல்கள், வர்ணனைக் காவியங்கள், கலைப்பாடல்கள் தோத்திரப்பாடல்கள், நாட்டுப்பாடல்கள், சமுதாயப்பாடல்கள், காவிய நாடகங்கள், நாடகங்கள், காலத்திற்கேற்ற கலைநூல்கள், பூதபௌதிக் பூகோள சாத்திரங்கள், தொடர்கதைகள், சிறுகதைகள், தமிழர் வரலாற்றுக் கதைகள், ஏராளமான மொழிபெயர்ப்புகள் யோகநூல்கள், வேதநூல்கள், சர்வமத வரலாறுகள், நீதிவிளக்க நூல்கள், அரசியல் சமுதாயக் கட்டுரைகள், கடிதங்கள், ஆங்கிலம், பிரெஞ்சு, ஹிந்தி முதலிய பலதுறை இலக்கியங்கள் அடிகள் புண்ணியத்தால் தமிழன்னை அடைந்திருக்கிறாள். அடிகளின் நூல்களை வெளியிட முன்வந்துழைப்பவர் பலராவர்.

அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அன்புத் திருவாளர்களான புதுவையாறு க. நடராஜன், செல்வ நடராஜர், வீர. மு. செட்டியார். சுவாமிநாதர், பழநியப்பா, வள்ளலப்பா, அண்ணாமலை ஆவர். இவர்கள் தன்னலங்கருதாத் தியாகிகள். தமிழுக்கே உயிர்க்கும் பெருந்தகையாளர். அடிகளின் அருள் வாக்கைச் சுவைத்து நாடெங்கும் பரப்ப ஆர்வங்கொண்ட உண்மையன்பர். இவர்கள் செய்யும் பணி மிகப்பெரியது. அப்பணியில் இவர்கள் தமக்கென எவ்விதமான சன்மானமும் எதிர்பார்ப்பதில்லை. இவர்கள் செய்துள்ள தமிழ்ப் பணிகளையும் அவற்றிடையே வந்த சோதனைகளையும் எதிர்ப்புகளையும் நினைத்தால் உள்ளம் உருகும். அன்பு நிலயத்திற்கு முதல் இல்லை. நூல்களே ஆதாரம். நிலயம் யாரிடமும் எதுவும் கை நீட்டிக்கேட்பதில்லை. தன்னால் வந்ததைக்கொண்டும் விற்பனையில் வரும் சிறு தொகையைக்கொண்டுமே நிலயம் நடக்கிறது. பணம் சேர்ப்பது அதன் நோக்கமன்று. பணிசெய்வதே நோக்கம். நிலயத்

# புத்தாண்டு வணக்கம்

ராகம் காபி — தாளம் ரூபகம்.

ஒன்று பட்ட நெஞ்சமும்,
உலக மெல்லாங் கோயிலே
என்று காணுங் காட்சியும்,
இலகுயிர் நலங்களே
நன்று செய்யும் ஆற்றலும்,
நலிவிலாத் தருமமும்
வெற்றியும் அளித்தருள்
விரிந்த பூமி நாதனே !

சள்ளையற்ற சாந்தமும்,
சலிப்பி லாத சக்தி யும்
கொள்ளை யற்ற செல்வமும்
கொடுமை யற்ற நீதியும்
எள்ள லற்ற சீர்த்தியும்
எதிர்ப்பை வெல்லும் வீரமும்
கள்ள மற்ற வாய்மையும்
கடவுளே யருளுவாய்.

வறுமையற்ற வாழ்க்கையும்
வாம்பி லாத ஈகையும்,
சிறுமை யற்ற சிந்தையும்
சிறந்த தேச சேவையும்,
பொறுமையுற்ற வீறுடன்
பொருமை யற்ற நேயமும்
திறமை யுற்ற சொல்லுடன்
சிறந்து வாழ்க மானிடர்

சூதிலாத் தொழில்களும்
சுரண்ட லற்ற வணிகமும்,
கோதிலாக் குணங்களும்,
குறையிலா வளங்களும்,
தீதிலாப் பொறிகளும்,
திருமிகுங் கலைகளும்,
வாதிலாச்சன் மார்க்கமும்,
வளர்க மாந்தர் வாழ்கவே !

சுத்தானந்த பாரதி.

---

திற்குத் தமது அறிவால் உதவிய புலவர் பலர். அவர்கள் மிகவும் போற்றத்தக்க புலவர்கள், டாக்டர் சுவாமிநாதய்யர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, ராவ்பகதூர் வையாபுரிப்பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் கா. சுப்பிரமணியபிள்ளை, காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை, ஜீ. சுப்பிரமணியபிள்ளை, மருங்காபுரி அரசி இலக்குமி அம்மணி அம்மையார், கவிராஜ பண்டித நா. கனகராஜ ஐயர் முதலியோராவார். இவர்கள் எங்கள் இலக்கியங்களுக்குச்செய்த உதவியை என்றும் மறக்கமுடியாது எங்கள் வெளியீடுகளுக்கு உதவிய அன்பருக்கு நூல்களின் பதிப்புரையில் அன்புசெலுத்தியிருக்கிறோம்.

அன்பருள் முதன்மையானவர் 1930–ஆம் ஆண்டு சிங்கப்பூரில் இருந்தமையால் அன்பு நிலயம் சிங்கப்பூர் 57, மார்க்கெட் தெருவில் ஒரு அன்பர் வீட்டில் நடந்தது. பிறகு ஈப்போவுக்கும் அலர்ஸ்டாருக்கும் மாறியது. பிறகு சில அன்பர் இராமச்சந்திரபுரத்துக்கு வந்தனர். அங்கே ஒரு அன்பர் வீட்டில் நிலயம் ஊன்றி நடந்தது. இப்போது வாடகை வீட்டிலேதான் நிலயம் இருக்கிறது. சென்ற இருபத்துமூன்றாண்டுகளாக நிலயம் தமிழுக்கும் சன்மார்க்கத்திற்கும் பணிசெய்தது; சென்ற நான்காண்டுகளாக அன்பு மலர்கள் வெளியிட்டுத் தமிழருக்கு அடக்கமாகத் தொண்டு செய்கிறது. பர்மா சிங்கப்பூர் ஜப்பானியர் வசமானதால் அங்கிருந்த எங்கள் நிலயக்கடையும் ஏராளமான நூல்களும் தொகையும் என்னவாயினவோ தெரியவில்லை. இப்போது தமிழர் தமிழ்நாட்டில் தரும் ஆதரவும் திருவருளுமே எங்களுக்குத் துணை. தக்க விளம்பரங்கூட இல்லாமல் நிலய நூல்கள் எப்படியோ பரவி வருகின்றன. எங்கள் நிலயத்திற்கு அருளே பொருள், அன்பே துணை. தமிழர் இன்பமே இன்பம். எந்தாய் வாழ்க !

# சோளசிங்கபுரம்

"பித்தம்தெளிய மருந்தொன்றிருக்குது" என்றுபாடினர் நந்தனர், அவருடைய பக்திப் பித்தம் தெளிவிக்கும் அருமருந்தான ஆனந்தத் தாண்டவராஜனைக்குறித்து. ஆனல் இன்று உண்மையிலேயே பித்தம் தெளிவிக்கும் மருந்து சென்னைக்கு சமீபத்தில் இருக்கிறது. விலை கொடுத்து வாங்கவேண்டாம். கஷ்டப்பட்டு விழுங்கவும் வேண்டாம் என்று சொன்னல் சிலருக்கு ஆச்சரியமாயிருக்கும். அது என்ன? மூலிகையா? பச்சிலையா? என்று நீங்கள் யோசிக்கவே வேண்டாம். அந்த மருந்து அரக்கோணம் ஸ்டேஷனிலிருந்து வெகு சமீபத்திலிருக்கும் சோளசிங்கபுரத்து ஸ்ரீ யோக நரஸிம்மன் தான்.

* * * *

நல்ல வெயில், இளவேனில்தான். இருந்தாலும் வெயில் வெகு உக்ரமாயிருந்தது. என்தோழி 'ஹரிணி' தங்கள் ஊருக்கு ஒரு முறையாவது வந்துபோகவேணுமென்று கூப்பிட்டிருந்தாள். நாங்கள் நாலைந்து பெயராய்ச் சென்னையைவிட்டுக் கிளம்பினேம். வெயில் காலத்தில் மூன்ரும் வகுப்பிலே பிரயாணம் செய்பவர்களுக்கே உரிமையான பல தனிச் சிறப்புகளை அனுபவித்தவண்ணம் அரக்கோணத்தை அடைந்தோம். "ஷோலிங்கர் ரோட்" என்ற பெயரோடு அடுத்த நிலயம் ஒன்றுண்டு. அதற்கும் ஊருக்கும் வெகு தூரமாகையால் அரக்கோணத்திலேயே இறங்கி பஸ்ஸில் வரும்படி எழுதியிருந்தாள் அவள். ஆகவே நாங்கள் இறங்கி பஸ்ஸிலே இடம் தேடத் தொடங்கினேம். கூட்டம் அதிகமில்லை; இடம் சுலபமாய்க்கிடைத்துவிட்டது. ஏறி உட்கார்ந்தோம்.

'பஸ் உற்பத்தியானபொழுதுமுதல் முதல் செய்த பஸ்போலிருக்கிறது' என்ருள் என் தோழி. அவள் சொல்லி வாய்மூடுமுன் பிரமாதமான ஆரவாரத்தோடு எங்களை ஒரு குலுக்கல் குலுக்கித் தூக்கிப் போட்டுவிட்டு கம்பீரமாய் நின்றது. அதன் கடகட சப்தம் காதுகளைத் தொளைத்தது. டிரைவரும் கண்டக்டரும் ஒருவர்பின் ஒருவராய் முணுமுணுத்தவண்ணம் மும்முறை வலம் வந்தார்கள். மறுபடி 'ஸ்டார்ட்' செய்தான் இன்ஞெருவன், இன்னும் பலமாய்க் கூச்சலிட்டு இரண்டடி முன்னே நகர்ந்து நின்றது. ஒருவருக்குமே புரியாத பாஷையில். பஸ்ஸையோ அல்லது முதலாளியையோ, அல்லது தன்னையும் படைத்து இந்தவெயிலிலே பஸ்ஸையும் ஓட்டும்படிவிதித்த கடவுளையோ திட்டியவனுய் மறுபடி ஏதேதோ செய்யத்தொடங்கினன். 'ஏதடா, இங்கேவந்து அகப்பட்டுக்கொண்டு விட்டோமே, என்று நினைப்பது போல் என்னை ஏறிட்டுப்பார்த்தாள்' என் தோழி.

அரைமணிநேர வழிபாட்டிற்குப் பின் ஹோவென்றபேரிரைச்சலோடு நிலையைவிட்டுப்பெயர்ந்து சோளிங்கபுரம் செல்லும் பாதையை அடைந்தது. அப்பாடாவென்று பெருமூச்சு விட்டோம்.

* * * *

ஊரை நெருங்குவதற்கு முன்பே கடிகாசலமென்னும் அந்தப் புனிதமான மலையும் அதன் மீதிருக்கும் அழகிய கோயிலும் தெரியத்

தொடங்கின. நெருங்க நெருங்க ஒரே செங்குத்தாய்ப் பணியாரம் போல் வானை அளாவி நிமிர்ந்து நிற்கும் அந்த நெடுங்குன்றத்தைப் பார்த்ததும் ஆச்சர்ய மிகுதியினால் திகைத்துப்போனேம். இந்தச் செங்குத்தான மலைமேல் எப்படி ஏறினார்கள்? செங்கல் சுண்ணும்பு முதலியவைகளை எப்படித்தான் சுமந்து போனார்களோ என்று திகைக்கும்படி இருந்தது அதன் அமைப்பு. பார்க்கப் பார்க்க எம்பெருமானது கம்பீர்யத்தையும் புகழையும் அது எடுத்துச்சொல்லுவதுபோல் தோன்றிற்று.

இதையடுத்துமற்றொருசிறுகுன்று. அதை அனுமன் மலை என்று சொல்வார்கள். அதில் தினந்தோறும் ஆறுகால பூஜை நடைபெறும். ஆனால் பெரியமலையில்எழுந்தருளியிருக்கும் யோக நரஸிம்மனுக்கு ஒருநாளைக்கு ஒரே வேளைதான் வழிபாடு. நிவேதனம். அரிசிப்பங்கீடு முறை அவருக்கு முன்னமே தொடங்கிவிட்டது. சாதாரணமாய் யாத்ரீகர்கள் வெள்ளியன்றுதான் விசேஷமாய் வருவது வழக்கம்.

நாங்கள் சென்றது வியாழக்கிழமை. 2, அல்லது மூன்றுமணி இருக்கலாம். ஒரே புழுதிப்படலத்தின் நடுவே வந்து இறங்கினேம் வரவேற்பு. வம்பு· இத்யாதி.

ஐந்து மணிக்கு யோக ஆஞ்சநேயர் ஸந்நிதிக்குக் கிளம்பினேம். பார்வைக்குச் சிறியதாயிருந்தாலும் மலை ஏறுவது அவ்வளவு சுலபமாயில்லை. மலை அடிவாரத்தில் நல்ல கிணறு. அதையடுத்து யாத்ரீகர்களின் வசதிக்காக ஏற்பட்ட சிறு வீடுகள். கல்யாணம் உபநயனம் என்று பிரார்த்தித்துக்கொண்டு வருபவர்களுக்கு ஏற்ற பெரிய சத்திரங்கள். இவைகளைத் தாண்டிச் சென்றால் மலை ஏறும் படிகள். படிகள் அதிக உயரமில்லை. இருந்தாலும் மேல் மூச்சு வாங்கத் தொடங்கிற்று.

மலையின் உச்சியில்தான் கோயில். அங்கிருந்து பார்க்க நெடுந்தூரம் வரையிலுள்ள காட்சிகள் சித்திரம்போல் தோன்றின. அங்கங்கேயுள்ள சின்னஞ் சிறு நீர்நிலைகள். வளைந்துவளைந்து நீரோட்டம்போல் செல்லும் பாதைகள். கூட்டங் கூட்டமாய்த தனித்தனியே நிற்கும் அழகிய தோப்புகள். இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது அங்கேயே தங்கிவிட்டாலென்ன என்றே தோன்றும்.

பெரிய மதிலுக்குள்ளே ஒரு சுனை அல்லது குளம் என்றே சொல்லலாம். அதையடுத்துத்தான் பிராகாரம். பிராகாரத்திற்குள்ளே நுழைந்தால் பெரிய மலையை நோக்கியவராய் உட்கார்ந்திருக்கும் யோக ஆஞ்சநேயர் ஸந்நிதி. ஸந்நிதிக்குநேர் எதிர் சுவற்றில் சிறு பலகணிபோல் ஒரு துவாரம். அதன் வழியே பார்த்தால் பெரிய மலையிலுள்ள கோபுரம் தெரியும். கற்பூர ஹாரத்தியும் தெரியும் என்று சொன்னார் ஒருவர். ஒரு வேளை நல்ல ஸூக்ஷ்மதிருஷ்டியுள்ளவர்களுக்குத் தெரியலாமோ என்னமோ. சென்றிருந்த எங்களுள் பெரும்பாலோரும் இட்டிலியின் கனமுள்ள மூக்குக்கண்ணடி அணிபவர்கள். எங்களால் எப்படி நிர்ணயிக்க முடியும்?

சந்நிதி மிகவும் நெருக்கம். கர்ப்பக்கிரகத்திலே சதுர்புஜங்களுடன் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் காட்சி தருகின்றார் மாருதி. பின் இரு கரங்களில் சங்கும் சக்கரமும். வலது கையில் அழகிய மணிகளாலான ஜபமாலை. இடதுகை ஜபம் செய்த கணக்குகளைக் குறிப்பது

போல் விரல்கள் மடக்கப் பெற்றிருக்கின்றன.

கண்மூடி மௌனியாக இராமத்தியானத்தில் ஆழ்ந்து உட்கார்ந்திருக்கும் அவரை நாம் செய்யும் சிறு ஓசையும் கலைத்துவிடுமோ என்று அஞ்சும்படி அமைந்திருக்கிறது அவர் முகமண்டலம். நம்மையறியாமலே குரல் தணிகிறது. தலைகள் தாழக்கரங்கள்குவிகின்றன, ஆனால் அங்கிருக்கும் அர்ச்சகருக்கு இதைப் பற்றிக் கவலையே இல்லை. அந்தக் கோயில் முழுவதும் 'சிலை ஓடும்' படியான குரலில் "ஸ்ரீ யோகாஞ்சனேயஸ்வாமி, சதுர்புஜம். வலக்கையில் ஜபமாலை. இடக்கையில் ஜபஸங்க்யை. பிரம்மப்பட்டம் வேணுமென்று தவம் செய்கிறார்.

'ராவ்பகதூர், திவான்பகதூர்,பட்டங்களுக்குத் தவம் செய்பவர்களைப் பார்த்திருக்கிறேன். பிரம்மப்பட்டத்திற்குத் தவம்செய்து பார்த்ததில்லை' என்றாள் குறும்புக்காரத் தோழி. உஸ்! என்று புருவத்தை நெறித்தேன்.

இராம நாமாமிருதத்தைக் காட்டிலும் உயர்ந்தது எது? என்று அறைகூவியவரும், பகவானே நேரில் வைகுண்டத்திற்கு அழைத்தபோது கூட "நீ நடந்து விளையாடியது இந்தப் பவித்ர பாரத பூமி. சூடாமணி கொடுத்தபொழுது ஆனந்த மிகுதியினால் உன்னால் தழுவப் பெற்றது இந்த உடல். நாவிலோ சொன்ன வாய் அமுதூறும் உன் நாமாமிருதம். இவைகளை விட்டு விட்டு அங்கே என்ன இருக்கிறது எனக்கு "அது" வேண்டாம்" என்று சொன்னவருமான வீர ஆஞ்சநேயர் பிரம்மப் பட்டமா வேண்டுகிறார்! இப்பொழுது தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார் போலும். இந்த வார்த்தைகள் காதில் விழுந்துவிட்டால், முன்பு பலராமன் என்று சொன்ன கருடனுக்கு நேர்ந்த கதி இந்த அப்பாவி அர்ச்சகருக்கு நேராதிருக்கவேண்டுமே என்று எங்களுக்குத் தோன்றியது.

அந்தமலையில் ஆஞ்சநேயர் தனித்திருப்பதைச் சகியாதவர்போல் கோயில்கொண்டிருக்கிறார் ஸ்ரீராம சந்திரமூர்த்தி. அவர் வரும்பொழுது அவரது குலதெய்வம் வரவேண்டாமா? ஆகவே அந்த சந்நிதியை அடுத்து அழகிய மணவாளன்என்று போற்றும் அரங்கநாதப்பெருமாள் பள்ளிகொண்டிருக்கிறார். மூன்று கோயில்களையும் தரிசித்துக் கொண்டு ஜபம் செய்ய உட்கார்ந்தோம். அந்த சமயத்தில் உளுத்தம் பருப்பு பங்கிடு கிடையாது. ஆகவே ஆஞ்சநேயர் சந்நிதியில் வடைமாலை கிடைத்தது. வானர சைன்யங்களோடு நாங்களும் பங்கிட்டுத் தின்றோம்.

*   *   *   *

'அடாடா! என்ன ஆனந்தமான காற்று. இந்த மலைக்காற்றுக்கே தீராத வியாதிகள் தீரும்' என்றாள் இன்னொரு தோழி. இதற்குள் பொழுது சாயவே நாங்கள் இறங்கத் தொடங்கினோம். மலையிலிருந்து ஊருக்குவரும் வழியிலேதான் தக்கான்குளம். இதைத் தக்கன்குளம் தக்ஷயாகம் செய்த இடம் என்றும் ஒரு சோழ அரசன் சிவனை வழிபட்டதால் சோழலிங்கபுரம் என்று பெயர்பெற்றது என்றும் சிவபக்தர் சொல்வதுண்டு; ஆனால் அவ்வூரில் சிவன்கோயிலிருப்பதாகவே ஒருவரும் சொல்லவில்லை.

தக்கான், அக்காரக் கனிப்பெருமாள் என்று எம்பிரான் திருநாமம். ஒரு கடிகையிலேயே முக்தி தருகிறாராம் பகவான்; அதனால்தான் கடிகாசலம் என்று பெயர் பெற்றது.

பேயாழ்வார், திருமங்கையாழ்வார் இவர்கள் மங்களாசாஸனம் பண்ணிருக்காள் என்று வைஷ்ணவர்கள் சொல்லுவார்கள். எந்தப்பெருமாள் எந்தத் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்தால் என்ன? அங்கே நுழையும்பொழுதே நம்மையும் அறியாமல் பக்தி சுரக்கும்.

*　　*　　*　　*

மறுநாள் காலே, நாங்கள் ஆடிப்பாடி மலே ஏறும்பொழுதே பத்து அடித்துவிட்டது. தக்கான் குளத்திலே நீராடி, ஈரவஸ்திரங்களுடனேயே ஏறத் தொடங்கினேம். இங்கேயும் திருப்பதியைப்போல் டோலி உண்டு. ஒரு ஆளுக்கு ஒரு ரூபாய். மலே ஒரே செங்குத்தாகையால் ஏறுவதற்குள் தவித்துப்போனேம். படிகளும் உயரம் அதிகம். சந்நிதியை அடையும்பொழுது சரியாய் உச்சிவேளே. ஆலாச்சிமணிகளின் ஓசை அந்த மலேப் பிரதேசம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. கோபுரவாயிலுக்கு நேர் எதிரில் மிகவும் உயர்ந்ததும் செங்குத்தானதுமான இன்னொரு மலே, சாதாரணமாய்ப்பார்க்கும்பொழுது அனுமான் கோயிலே இதன்மீதே கட்டி இருக்கலாம் என்று சொல்லும்படி நிமிர்ந்து நின்றது.

" இப்பொழுது ஆஞ்சநேயர் இருக்கும் மலே ஓர் ஒதுக்குப்புறமாய் விட்டது. இந்த எதிர் மலேயிலேயே ஆஞ்சநேயர் ஸந்நிதி இருந்தால் இன்னமும் அழகாயிருக்கும்" என்ருள் என் தோழி.

"சிற்பி நம்மைக் காட்டிலும் கெட்டிக்காரன். இங்கேயே ஆஞ்சநேயர் தங்கிவிட்டால் வாரம் ஒருமுறைகூட நிவேதனம் கிட்டாது. பிறகு ஊருக்குள்ளேபுகுந்து தோட்டந் துறவுகளேயெல்லாம் சூறையாடிவிடப் போகிருரே என்று பயந்துதான் சின்ன மலேயிலேயே இருத்திவிட்டான்" என்றேன்.

இதற்குள் தீபாராதனே மணி யோசை கேட்கவே நாங்கள் உள்ளே நுழைந்தோம். வேதபாராயணம் ஓர்புறமும் தமிழ்மறையாகிய திவ்ய ப்ரபந்தம் ஓதுவார் மற்றெரு புறமும் உட்கார்ந்து எம்பெருமான் புகழைப் பறக்கப் பாடிக்கொண்டிருந்தனர்.

அழகிய பிராகாரம். அதன் நடுவே நான்குபடிகள் ஏறினல் விசாலமான மேடை. அதன்மேல்தான் கர்ப்பக்கிருகம். அதைச் சுற்றிலும் மிகவும் நெருக்கமான சிறு உள் பிராகாரம்; அதன் நடுவில் உயர்ந்த மேடையின் மீதுதான் அருளே உருவெடுத்து வந்தாற்போல் வீற்றிருக்கிருர் ஸ்ரீயோகநரஸிம்மமூர்த்தி, பயங்கரமாயிருக்கவேண்டிய அந்த வீர நரஸிம்மன் முகத்திலே சாந்தம் நிலவ கண்களே மெல்ல மெல்ல அரைக்கண் திறந்து நம்மைக் கடாக்ஷிக்கிருர்.

கரியவாகிப் புடைபரந்து செவ்
வரியோடிய நீண்ட அப் பெரிய
வாய கண்கள் என்னேப்
பேதமை செய்தனவே

என்ற தொடர் என் மனத்துள் எழுந்தது.

அவரது இடதுமடியிலே ஆனந்தமாய் வீற்றிருக்கும் ஸ்ரீதேவி 'அஞ்சேல்; அஞ்சேல்' என்று அபயமளிக்கும் அழகும் காணற்கரிய காட்சியாய்த் திகழ்ந்தது. பிரஹ்லாதவரதனை அந்தப் பெருமானது திவ்ய தரிசனத்திலே மெய்மறந்தவர்களாய் நின்றுவிட்டோம். மணிச் சத்தம் ஓய்ந்து தீர்த்தமும் பிரஸாதமும் கொடுக்கும்பொழுதுதான் எங்களுக்கு உணர்வுவந்தது. இன்னும் சற்றுநேரம் தங்குவதற்கில்லேயே என்ற ஏக்கத்துடன் திரும்பினேம்

# லார்டு லிஸ்டரும் ரணவைத்தியமும்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M. B., B. S. D. T. M.

இப்படி அணுஜீவ சாஸ்திரம் பிரபலமடைந்து வருகையில், இந்த ஞானத்தை ஒரு புதிய துறையிலே பயன்படுத்தத் தொடங்கினர்கள்.

நீர் முதலான திரவ ப்தார்த்தங்களை அதி தீக்ஷ்ணமாக உஷ்ணத்தினலே கொதிக்கவைத்து, அவற்றில் உள்ள அணுஜீவன்களைக்கொன்று, காற்றுசம்பந்தப்படாதபடி அடைத்து வைக்கக்கூடிய பாத்திரங்களிலே வைத்துக் காக்கும் முறைகளையும் உபகரணங்களையும் கண்டுபிடித்தவர் லுயி பாஸ்சர் கார்பாலிக் அசிட் (Carbolic acid) என்னும் மருந்தால் அணு ஜீவன்களை நாசம் செய்யலாம் என்று கண்டுபிடித்தவர் லிமேர் (Limar) இவ்விரு விஞ்ஞானிகள் அளித்த ஞானத்தை ரண வைத்தியத்திற்குப் பயன்படுத்திப் பிரக்யாதி பெற்றவர் லார்ட் லிஸ்டர் இவர் ஆங்கிலேயர். 1827-லே பிறந்தார். 1912-ஆம் வருஷம்மட்டும் வாழ்ந்திருந்தார். இவர் காலத்திற்கு முன் ரண வைத்தியம் பெரிதும் முன்னேற்றமடையவில்லை; மனிதர்களும் ரண வைத்தியம் என்றுலே நடுங்குவார்கள். எளிதிலே இந்த வைத்தியத்திற்கு இணங்கமாட்டார்கள்.

ஆயுதங்களாகலே அறுக்கும் போது, நோயாளி வேதனையைத் தாங்கமாட்டான். இதற்கென்ன செய்யலாமென்று யோசித்தவர் ஸர் ஜேம்ஸ்ஸிம்ஸன் (Sir James Simpson) நோயாளிக்கு வேதனை தெரியாமல் இருக்கக் குலோரபாம் (Chloroform) என்னும் மருந்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர். இதனலே, ரணவைத்தியனுடைய கத்திக்குப் பயப்படுதல் சற்றுக்

---

இறங்கும்பொழுது சரியான வெய்யில். பாறைகள் பழுக்கக் காய்ந்திருந்தன. சாலைகளிலே செருப்புடன் நடந்து வழக்கப்பட்டவர்கள் கேட்கவேணுமா? நான்கு படி இறங்குவதற்குள் தவித்துப் போனோம். வேறு வழியில்லை. சாப்பாட்டிற்குக் கீழே வந்தாகவேணும். பெரியவர்கள் மட்டுமானலும் மலை மேலேயே இருந்துவிடலாம். சிறு குழந்தைகள் வேறு. இந்த சமயத்திற்கு எங்கள் கையிலிருந்த ஈர வஸ்திரங்கள் அங்கங்கே சற்று நிற்க உதவியாயிருந்தன. எப்படியோ நரஸிம்மனைத் தியானம் செய்து கொண்டு கீழேவந்து சேர்ந்தோம்.

ஊருக்குள்ளேயும் ஒரு அழகிய கோயில். விசாலமான பிராகாரங்களும் மண்டபங்களும் நிறைந்தது. இந்தக் கோயிலேதான் பிரம்மோற்சவம். நரஸிம்ம ஜயந்தி, ஹனும ஜயந்தி, இவைகள் விசேஷவிமரிசைகளோடு நடைபெறுமாம். தொண்டைநாடுசெழித்திருந்தகாலத்திலே ஊர் நித்யோத்ஸவம் போலிருக்குமாம். இப்பொழுதும் பக்தர்களுக்குக் குறைவில்லை. முடிஇறக்க வருவோரும், உபநயனம், விவாகம் முதலியன செய்விப்போரும், பித்தந் தெளிய வருவோரும் சூழ வீற்றிருக்கிறர் ஸ்ரீ யோக நரஸிம்மமூர்த்தி.

குறைந்த போதிலும், ரண சிகிச்சை இன்னும் ஒப்புக்கொள்ளக்கூடிய தாகவில்லை. ஏன் என்றால், வேதனை உணராமலே ரணசிகிச்சை செய்து கொண்ட நோயாளி வெகு சீக்கிரம் ஜன்னி ஜுரத்திற்கு ஆளாகி இறக்கவும் நேர்ந்தது. ஆப்பரேஷனுக்குப் பிறகு நோயாளி சீழ் பாதையினால் ஜன்னி ஜுரத்திற்கு ஆளாகாதபடி, வழிகளைக் கண்டறிந்தார் லார்டு லிஸ்டர். காற்றிலும், கழுவும் நீரிலும் காற்றிலே திரியும் தும்பு தூசியிலும் உள்ள சீழுக்குக்காரணமான அணுஜீவன்கள் ஆப்பரேஷன் செய்த இடத்திலே கசிந்த ரத்தத்தில் கலக்கின்றன என்பதும், இப்படிக் கலக்கிற அணு ஜீவன்களே சீழ் வைப்பதற்குக் காரணம் என்பதும் இவருடைய காலத்திற்குமுன் இருந்தவர்களுக்குத் தெரியாது. லார்டு லிஸ்டர் கார்பாலிக் ஆஸிட் மருந்தை எண்ணெயிலாவது தண்ணீரிலாவது கலந்து உபயோகித்து ரணங்கள் சீழ் பிடியாதபடி காப்பாற்றினர். இதுமுதல் ரணசிகிச்சையால் வரும் விஷ ஜுரங்கள் குறைந்துவிட்டன. ஆப்பரேஷன் முறைகளும் முன்னேற்றமடைந்தன. இதற்குப் பிறகு தான் ரண வைத்தியம் பிரபலமடைந்தது.

* * * *

ரசாயன மருந்துகளின் குண தோஷங்களைத் தெரிந்துகொள்ள எங்கும் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அணுஜீவ ஸம்ஹாரிகளான மருந்துகள் எவை என்றும் ஆராய்ந்தார்கள். சவ்வீரம் (Mercury perchloride) என்னும்மருந்து அணு ஸம்ஹாரிகளிலே மிகச்சிறந்ததென்றும், ஆயிரத்திற்கு ஒரு பங்கு மருந்தை நீரிலே கலந்து உபயோகித்தால் அணு பிஜங்களும் இறந்துவிடும் என்றும் ஒரு ரசாயன சாஸ்திரி கண்டறிந்தார்.

## டாக்டர் ஜென்னர் (Jenner)

வைசூரி நோய் வராதபடி தடுக்கும் அம்மை குத்துதல் என்ற உபாயத்தைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஜென்னர் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. இந்த அற்புத ரகசியத்தை இவர் கண்டுபிடிக்கத் தூண்டுதலாக இருந்தவள் ஒரு குடியானவப் பெண். "ஊரெங்கும் அம்மை உலாவுகிறதே; உனக்கு அம்மைவருமென்ற பயமில்லையா?" என்று டாக்டர் ஜென்னர் கேட்டதற்கு, அந்தக் குடியானவப் பெண் "எனக்கு மாட்டம்மை போட்டிவிட்டது; இனிமேல் அம்மைவராது" என்றாள். இதைக்கேட்டதும் டாக்டர் ஜென்னர், பெரியம்மை வியாதியை மாட்டிற்கு வரப்பண்ணி, அதன் பாலை எடுத்து மனிதர்களுக்கு குத்தி, அந்த வியாதி வராதபடி தடுத்துப் பல பரீக்ஷைகள் பண்ணி, முடிவிலே அம்மை குத்துதல் என்னும் முறையைக் கண்டுபிடித்தார்.

தொத்து நோய்கள் ஒரு முறை வந்தால், திரும்பத் திரும்ப வராது என்பது வெகு நாளாக மனிதன் அறிந்திருந்த ஒரு விஷயம். இதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்தவர் லூயி பாஸ்சர். வைசூரியை அம்மைகுத்தித் தடுக்கமுடியுமானால், இதரத்தொத்து நோய்களையும் அம்மை குத்துதல் மூலமாகத் தடுத்துவிடலாம் என்று யோசித்தார். மனிதனுக்கும் மாட்டுக்கும் வருகிற வைசூரி நோய்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளனவாய் இருக்கவேண்டும்; அப்படி இராவிட்டால், மனிதனிடமுள்ள அணு ஜீவன் மாட்டுக்குள் பரவும் போது, மாறுதல் அடைந்துவிடும். திரும்பவும் மாட்டிலிருந்து அணு ஜீவனை மனிதனுக்குள் பரவச்செய்தால், வைசூரி உக்ரமாய் வராமல், இலேசாகத் தோன்றும்.

**ஸ்ரீமதி ராஜம்—நரசிம்மன்**

# மனச்சாட்சி

அன்று கோர்ட்டில் அதீதமான பரபரப்பு காணப்பட்டது. காரணம் —ஜஸ்டிஸ் ராம்ஸேயின் இரண்டு ஆச்சர்யகரமான செய்கைகளே. வறுமையால் வாடும் தன் குடும்பத்தைக் காப்பதன் பொருட்டு, ஒரு மனிதனை குளத்தில் தள்ளிவிட்டு, அவன்கரையில் வைத்திருந்த மோதிரங்களை எடுத்ததாக தானே ஒப்புக்கொள்ளும் ஒரு குற்றவாளியை அஸெஸர்களின்ஏகோபித்த அபிப்ராயத்திற்கு விரோதமாக விடுதலை செய்துவிட்டு, சிறிது நேரத்தில் தன் பதவியையும் ராஜீநாமா செய்துவிட்டாரே, கலியுக மனு என்று போற்றப்படும் இவருடைய இச்செய்கைகளின் மர்மம்தான் என்ன? ப்ரபல துப்பறிபவர்களினாலும்கண்டுபிடிக்க முடியாத இந்த ரகசியத்தை ஒரு எழுத்தாளரின் 'ஞானக்கண்' மூலம் பார்த்தறிவோம்.

சுமார் 20 வருடங்களுக்கு முன் ஒரு இரவு ராமசாமி என்னும் வாலிபன் 'மதருஸ் மெயிலில்' மூன்ருவது கிளாஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அந்தகாரமான வெளியை கிழித்துக்கொண்டு போகும் வண்டியில் தனியாக தலைக்கு கைகொடுத்தவண்ணம், ஏக்கம் தோய்ந்த முகத்துடன் அவன் வீற்றிருப்பதன் காரணம் என்ன? மேல் வகுப்புகள்வரை படித்து, பெரிய உத்யோகம் வகிக்கவேண்டுமென்று ஆகாயக் கோட்டைகட்டி வந்த ஓர் வாலிபனின் தகப்பனர், திடீரென்று மரணமடைந்த காரணத்தால் தன் எண்ணங்களில் மண் விழ எப்படி சகிப்பான்? உலகத்தில் பண வசதி படைத்தவர்களுக்கு படிக்கத்தோணுவதில்லை. படிக்க ஆசையுள்ளோருக்கு, பணம் இல்லை தன் நிலைமையை வெறுத்த அவன் மனம் மேற்கொண்டு என்ன செய்வதென்றறியாது தத்தளித்தது. தன்னுடையது பேராசையென்று பரிகாசம் செய்து துரத்திய தன்உற்ருர் உறவினர் மேலும் வெறுப்பு நிறைந்திருந்தது அவன் உள்ளத்தில்.

திடீரென ஒரு ஸ்டேஷனில் நின்ற வண்டியுள் மற்றொருவர் நுழையும் சப்தம் கேட்டு நிமிர்ந்தான் ராமசாமி. தன் சாமான்களை எடுத்துவந்த கூலிக்கு அணு கொடுக்கும் பொருட்டு முன்னவர் தன் மணிபர்ஸை எடுத்து திறந்தபோது, அதில் அநேக நூறு ரூபாய் நோட்டுகள் இருப்பதைக் கண்டதும், அவனுடையகண்கள் விஷத்தைகக்கின.

மறுபடியும் வண்டி கோரமான இரைச்சலுடன் ஓடிக்கொண்டிருந்தது. தன்னருகில் இருப்பவர் ஏதோ காரியமாக கதவின் சமீபமாக நின்ற வண்ணம் வெளியில் பார்த்துக் கொண்டிருந்ததையும் அவர் கையில் அந்த மணிபர்ஸ் இருந்ததையும் வண்டியில் தாங்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதையும் தெரிந்துகொண்டான். அதற்குள் ஏதோ ஒரு நாசகரமான முடிவுக்கு வந்து,பொறிதட்டும்நேரத்தில் அவரின்மீது பாய்ந்து, ஒரு கையால் மணிபர்ஸை பிடுங்கிக் கொண்டு, மறு கையால் வெளியே அவரைத் தள்ளினன். மறுகணம் அவர் சாமான்களும் அவரைத் துடர்ந்தன.

மறுநாள் காலை வயலுக்கு வந்த குடியானவர்களின் உதவியினுல்

வை. மு. கோ.

# சமையல்கூடத்தில் சண்டை

கதம்பப் பாட்டி:—பொங்கலம்மா! அதோ பாத்தியா! காலம் போகிற போக்கு எப்படியிருக்கிறது பாரு... வெள்ளிக் குடத்திலும் வெள்ளிக் கூஜாவிலுமாக அந்த சுந்தரி காப்பியம்மாள் ஜம் ஜம் என்று சவாரி போகிற ஒய்யாரத்தைப் பார்த்தாயா! அடேயப்பா! என்ன தலை கிறுக்கு? என்ன கர்வம்? இந்த அல்பச்சிறுக்கி நேற்று முளைத்தவள் என்பது மறந்துபோய் விட்டது பாவம்!

பொங்கலம்மாள்:—எப்படி பாட்டி நினைவிருக்கும்? நீங்களும் நானும் ஆயிரக்கணக்கான வருஷத்திய மனிதர்களாதலால் ஒரே நிதானமாய் ஒரே ரீதியில் இருக்கிறோம். ஓண்டவந்தப் பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டித்தாம் என்பதுபோல் நம்மை விரட்டியடிக்க வந்த மகாராணியோ இல்லையோ! அதன் தலை தம்பிடியாய் நாறுகிறது, அல்பம் பணம் படைத்தால் அர்த்த ராத்திரியில்தானே குடை பிடிக்கும்...நம்மைப்போல் இந்த நாகரீக சிங்காரிக்கு அனுபவம் உண்டா! ஆயிரக்கணக்கான கல்யாணங்களை நாம் நிறைவேற்றி எவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கிறோம்? நம்மை அங்கீகரித்த எத்தனை ஆத்மாக்கள் சம்பூர்ண த்ருப்தியடைந்து நம்மை வாழ்த்தினார்கள்? இந்த தஸ்கிக்கு அந்த பாக்யம் உண்டா?

கதம்பம்:—ஐயோ, ராமா! பெரிய இடத்துக் கல்யாணங்களில் நாம் கண்ட காட்சியைவிடவா இது கண்டிருக்கப்போகிறது? காலையில் ஒரு தவலை பொங்கல், ஒரு அடுக்கு கதம்பம், ஒரு அடுக்கு ததியோனம், ஒரு கூடை வத்தல், அப்பளம், ஒரு சட்டி ஊறுகாய்... இவைகள் அலங்காரமாக கண்காக்ஷிச்சாலைபோல் காக்ஷி கொடுக்கும். காலையில் ஆண் பெண் அடங்கலும் நம்மை ஒரு கை பார்த்துவிட்டால் பிறகு முகூர்த்தம் ...நலங்கு ஔபாஸனம்...முதலியன முடிந்ததும் பகல் இரண்டு மணி வரையில் பசி என்பதே இல்லாது சந்தோஷமாகச் சடங்குகளை நடத்துவதும் ஏரி குளங்களில் திளைந்து

---

மூர்ச்சை தெளிந்தஅந்த துர்ப்பாக்யசாலி தன் எதிரியைப்பற்றி சொல்ல முடிந்தது கொஞ்சமே. அதை வைத்துக்கொண்டு போலீஸார் செய்ய முடிந்தது ஒன்றுமில்லை.

அடுத்த ஸ்டேஷனில் மணிபர்ஸுடன் வண்டியிலிருந்து இறங்கிய ராமசாமி மேல் படிப்பிற்காக கல்லூரியில் சேர்ந்ததும், கொள்ளையிட்ட பணம் திருவத்தற்குள் பிரின்ஸிபாலின் அன்புக்குப் பாத்திரமாகி, அவருடைய உதவியால் மேலும் மேலும் படித்து, ஜட்ஜு உத்யோகம் பெற்றதும், கடைசியாக, கிருஸ்துவ மதத்தில் சேர்ந்ததால் தன் பெயரை ராம்ஸே என்று மாற்றிக் கொண்டதும் குறிப்பிடத் தக்கது.

இன்று தன்முன் நிற்கும் குற்றவாளியே தன்னால் ரயிலிலிருந்து தள்ளப்பட்டவனென்று அறிந்ததும் அவனைத் தண்டிக்க எப்படி மனச்சாட்சி இடம் கொடுக்கும்?

வீடு திரும்பிய அவர் மனது நிம்மதியடைந்திருந்தது. தன்னை இது நாள்வரை ஒரு கொலையாளி என சுட்டிக்காட்டிவந்த அவர் மனச்சாட்சியின் கையினின்று இன்று விடுதலையடைந்தார்.

திளைந்து நீராடுவதுமாக சந்தோஷமாய் உலாவிவிட்டு இரண்டுமணிக்கு சம்பிரமமாகச் சாப்பிடவருவார்கள். உடம்பும் கலகலப்பாக இருக்கும்.

ததியோனம்:—உ ம்......அ ந் த காலத்தில் சில சமயங்களில் சில வீடுகளில் உங்களைப் பார்த்து நான் கூடப் பொருமைப்பட்டிருக்கிறேன் "காலை வேளையில் பொங்கல் போதும் கதம்பம்போதும்"...என்று சிலர் என்னை விலக்குவார்கள். சிலர் நான் ஒருத்தியே போதும் என்றும் ஜமாய்ப்பார்கள். அந்த குஷியும் அந்த குதூகலமும் இப்போது ஏதடியம்மா... கண்ணை நிமிண்டி விழித்த உடனே காப்பி...பின்னும் அரை மணிக்கெல்லாம் காப்பி......இப்படியே போக வர டம்ளர் டம்ளராகக் குடித்துக்கொண்டு திரிவதால் பசிதான் அடங்குகிறதா! உடம்புக்குத்தான் ஆகிறதா...இந்த நாகரிக அரக்கி வந்தாலும் வந்தாள், தோட்டி முதல் தொண்டைமான் வரையில் இந்த தேவடியாள் சிறுக்கிக்கு அடிமையாகி பலவிதமான நோய்களை விலை கொடுத்து வாங்கிவிட்டார்கள்.

போங்:—ஆமாம்...என்னமோ... டயாபட்டீஸாமே...ஒரு நோய்...... அது இந்தம்மாளின் ப்ரஸாதத்தினுல்தான் அதிகமாகி விட்டதாம். நாகரீக காலத்தில் பழைய காலத்து மனிதர்களும் பழக்க வழக்கங்களும் மறைந்துதானேபோகின்றன..காலை ஆகாரத்திற்கு முதன்மையாயிருந்த நம்மை இப்போது சாப்பாட்டுக்கு நடுவில் புகுத்தி விரட்டுகிருர்கள். பஞ்சபக்ஷ பரமான்னத்தைத் தின்ற பிறகு இது யாருக்குப் பிடிக்கும்?... ஏதோ பழகியவர்களாயிற்றே விடக்கூடாது என்று போராடுகிருர்கள்.

சொஜ்ஜியப்பம்:—உங்க ளை யா வது சமாராதனையில் சேர்க்கிருர்கள். விதவிதமான பக்ஷணங்கள் நவநாகரிகப்பெயரில்...ஏன் துலுக்க இங்கிலீஷ் பெயரில் பாதுஷா என்றும், குலாப்ஜான் என்றும், ஜியாங்கீரி என்றும், டாப்பிஎன்றும் ஜாம், கேக்கு, ஸ்வீட்டப்...என்றும் நாக்கில் திரும்பாத பெயர்களுடன் நிர்த்தனமாடக் கிளம்பிய பிறகு சொஜ்ஜியப்பத்தை யார் கண்ணல் பார்க்கிருர்கள். சில ப்ராம்மணர்கள் வீட்டில் திவசத்தன்று கட்டியழுகிருர்கள். சிலர் அதுவுமில்லை. அப்பம் அதிரசம்...இவர்களுக்கு வரவேற்பு கொடுக்கிருர்கள்....இந்த லக்ஷணத்தில் நான் என்ன வாயைத் திறக்க முடியுமா! எனக்கு உரிமையான ரவை, மாவு, நெய், சக்கரை...... இவைகளையேகொண்டு வேறு நாடகம் ஆடினல் அது எனக்கு அழுகை யழுகையாய் வருகிறது.

அக்காரவடிசல்:—ஐயோ, ராமா! அழுகை வருகிறதாம் அழுகை... திவச வீட்டிலாவது உன்னை இன்றும் சிலர் மறக்கவில்லையே! அதைக் கண்டு நான் பொருமைதான் படுகிறேன். நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் அக்காரவடிசல் (பாயஸம்) எத்தனை இடங்களில் ஆழ்வார்களே பாடியிருக்கிருர்கள்...சாக்ஷாத் எம்பெருமானை மணக்கும்பொருட்டு கோதா நாச்சியார் ஏழு கடாரம் அக்காரவடிசல்செய்து பகவானுக்குச்சமர்ப்பிப்பதாகப் ப்ரார்த்தனையே செய்து கொண்டாள். அந்த ப்ரார்த்தனையை தங்கை முறையில்ஆண்டாளைநேசிக்கும் ஸ்ரீராமாநுஜர் பூர்த்திசெய்தார். அந்த உத்ஸவம் நாளையும் நடக்கிறது. அத்தகைய அக்காரவடிசல் இல்லாத கல்யாணமே முன்பெல்லாம் கிடையாது. இப்போதோ, அடேயப்பா! சேமியா பாயஸம், ஜகன்மோகினி பாயஸம், அவல் பாயஸம், பூரி பாயஸம், பிலாச்சுளை பாயஸம், பாதம்கீர், ரவா பாயஸம்,

ஜவ்வரிசி பாயஸம், தேங்காய் பாயஸம், பயத்தம்பருப்பு பாயஸம், திருப்புல்லாணி பாயஸம்...என்று கணக்குவழக்கற்ற பாயஸப்புலிகள் கிளம்பிவிட்டதால் என்னை அடியோடு மறந்தே போய்விட்டார்கள்.

கடலைப்பருப்பும், பயத்தம்பருப்பும், அரிசியும்போட்டு நன்ருகக் கூழாகசிக்கவைத்துப்பின் வெல்லம் சேர்த்து பாலை ஏராளமாகக்கொட்டி குங்குமப்பூ, ஜாதிக்காய், பச்சைகற்பூரம், ஏலக்காய் முதலியனசேர்த்து முந்திரிப்பருப்பை வறுத்துப்போட்டு நெய்யைவிட்டு அக்காரவடிசல் செய்தால் எப்படித்தானிருக்கும்!...உம்... இன்னும் நாகரீகம் முதிரமுதிர நீங்கள்கூட அடியோடு மறைந்து என் கதிக்குத்தான் வந்துவிடுவீர்கள். உங்கள் ஸ்தானத்தை இட்டிலியும் காப்பியும் பிடித்துக்கொண்டதுபோல் என் ஸ்தானத்தைப் பலபேர் பிடித்துக்கொண்டார்கள். உலகம் தலைகீழாகிவிட்டது.

இட்டிலி:—இதோ பாருங்கள். நாங்களும் அப்போதிலிருந்து பார்க்கிருேம். உங்கள் வயித்தெரிச்சல் தீமூண்டு எரித்துவிடும்போலிருக்கிறது. எங்களையும் ஒடுக்கி உள்ளடக்குவதற்குத்தான் கோர யுத்தம்வந்து குதிக்கிறது. உளுந்து பஞ்சத்தால் நான் மறைந்து வருகிறேன். ரேஷன் பஞ்சத்தால் காப்பியும் அப்படி... இப்படி...ஆடுகிருள். பழய காலத்துப் புடவைகள், நகைகள் முதலியன வேறு பெயருடன் சிறிது மாறுதலுடன் மறுபடியும் புனர்ஜென்மம் எடுத்ததுபோல் நீங்களும் கூடிய சீக்கிரம் புதிய பெயரில் புனர்ஜென்மம் எடுத்துவிடுவீர்கள். ஏன் எங்களைப் பார்த்து வயிறெரிய வேண்டும்? நானும் உங்கள் கோஷ்டியில் வந்துவிடுவேன். ஆனல் அந்த காப்பி இருக்கிருளே; அவள் மட்டும் அசையப் போவதாகத் தோன்றவே இல்லை. ப்ரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைப் பிடித்தநல்ல லக்னத்தில் சுபயோக சுபதினத்தில் காப்பியும் மக்களைப் பிடித்ததால் பயமே இல்லை. காப்பியை எதிர்க்க டீ....கோகோ....ஓவல்டீன்....மண்ணங்கட்டி, தெருப்புழுதி...எது வரட்டுமே ஊஹூம்...உபயோகப்படாது...வெற்றி அவளுக்கு இருப்பதால்தான் வெள்ளிக் குடத்தில் கூத்தாடிக்கொண்டு போருள்.

பொங்கல்:—அடேயப்பா! நீ மட்டும் அவளுக்குக் குறைந்தவளில்லை. அதோ பாரு. நாலு டம்ப்ளர் காப்பி நாலு இட்லி...என்று சமையல்காரனிடம் எஜமானர் உத்திரவிடுகிருர்... உம்...போங்கள்...போங்கள் உங்கள் ராஜ்யமாகவே இருக்கட்டும். இதைக்கேட்டசமையல் உள்ளிருந்த பதார்த்தங்களும் கலகலவென்று சிரித்தன...அந்த எதிரொலி அவ்வறையில் சூழ்ந்தது.


## நந்தவனம் தாரண ருதுமலர்கள்

காரண ருதுமலர் தொகுதி முற்றும் சேர்ந்து முழு புத்தகமாக கிளேஸ் பதிப்பு மட்டும் வெளியிடுகிறோம். சுமார் 700 பக்கங்கள்கொண்ட விஷய மேன்மை பொருந்திய இந்த நூலில் சுமார் 100 படங்கள் (பல கலர்களில்) வெளியாகி, அழகுக்கு அழகு செய்து, ஸ்வர்ணத்தில் வைரம் பதித்தது போன்று சோபிக்கின்றன. தனித்தனியே ருதுமலர்களை வாங்காதவர்கள் அதே விலையில் அதாவது ரூ. 9/—க்கே இந்த அரிய நூலைப் பெறலாம். மனதுக்கு ஆனந்தம். கண்களுக்குக் கவர்ச்சி. கற்பனைக்குத் தூண்டுகோல். உடனே முந்துங்கள்.

நம் சகோதரிகளுக்கு மட்டும்

# ஸ்திரீதனமும் வாரிசுரிமையும்

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

சென்ற இதழ் தொடர்ச்சி

ஒரு இந்து ஸ்திரீக்கு சொந்தமாக அவள் பெயரில் நிலம், வீடு, தோட்டம், ரொக்கம், நகை, பாத்திரம், பண்டம் எனப் பலவகைச் சொத்துக்கள் இருக்கக்கூடும். அவைகளில் சில பூரண உரிமை உடைய சொத்துக்களாகவும் சில அனுபவ உரிமை மாத்திரம் உடைய சொத்துக்களாகவும் இருக்கக்கூடும்.

பூரண உரிமை உடைய ஸ்திரீதன சொத்துக்களை, அந்த ஸ்திரீ தன் ஜீவியகாலத்திலேயே, யாராருக்குக் கொடுக்க இஷ்டமோ, எப்படி வினியோகிக்க விருப்பமோ, அப்படி வினியோகித்துவிடலாம். அல்லது வினியோகிக்கும் முறையை எழுதிவைத்துவிட்டுப் போகலாம்.

அப்படிச் செய்வாளேயானால், பின்னளில் அந்த சொத்தை பிரித்துக் கொள்வதில் யாதொரு தகராறும் ஏற்படாது. அப்படிச் செய்யாது (உயில் எழுதாமல்) விட்டுப் போகிறதினல்தான், வாரிசுதாரர்களை நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்பட்டு, கோர்ட்டுக்குச் செல்வதும், பந்துக்களுக்குள் பரஸ்பர மனஸ்தாபமும், அனவசியமான பண விரயமும் ஏற்படுகின்றன.

உயில் எழுதிவைக்காமல் இறந்துவிட்ட ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதனச் சொத்துக்கு வாரிசுதாரர் யார்?

வாரிசுதாரரை நிர்ணயிக்கும்முன் அச் சொத்து சம்மந்தமான சில விஷயங்களைத் தெரிந்துகொள்வது அவசியம். உண்மையில் அது அவளுடைய ஸ்திரீதன சொத்தா? அல்லது வாரிசு கிரமமாக, ஆணிடமிருந்தோ பெண்ணிடமிருந்தோ வந்த சொத்தா? அதில் அவளுக்கு எந்தவித பாத்யதை உண்டு, பூரண உரிமையுண்டா? அல்லது அனுபவ உரிமைமாத்திரம்தான் உண்டா?

அனுபவ உரிமைமாத்திரம் உடையதும் வாரிசு கிரமமாக வந்ததுமான சொத்துக்களைப் பிரித்து வைத்துவிட்டு, பூரண உரிமை உடைய ஸ்திரீதன சொத்துவகைகளை மட்டும் வாரிசுரிமை நிர்ணயிக்க எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றல் மேற்கூறிய சொத்து வகைகளுக்கு வாரிசுரிமை ஏற்கனவே உண்டு.

வாரிசுதாரர்களை நிர்ணயிப்பது, மற்றும் சில விஷயங்களைப்பொருத்திருக்கிறது. சொத்துக்குடையவள் இறக்கும்பொழுது எந்த நிலைமையில் இருந்தாள்? விவாகமானவளா? கன்னிகையா? விவாகமானவளானல், எந்த முறைப்படி விவாகம் ஆனவள்? அதாவது பிரமம் முதலிய சாஸ்திரோக்தமான யுக்தமுறைப்படி விவாகமானவளா? அல்லது கந்தர்வம் முதலிய சாஸ்திரம் ஒவ்வாத அயுக்தமானமுறைப்படி விவாகமானவளா?

சொத்துக்கு அதிகாரி எந்த மாகாணத்தை, அங்கே கையாளப்படும் எந்த முறையைச் சேர்ந்தவள்? அந்த சொத்து எந்த ஸ்திரீதன வகையைச் சேர்ந்தது? இவை

களுக்குக் கிடைக்கும் விடைகளைக் கொண்டுதான் சொத்துக்கு வாரிசுதாரர்களை நிர்ணயிக்கமுடியும்.

**கன்னிகையின் ஸ்திரீதன சொத்துக்கு யார் வார்சுதார்**

மிதாக்ஷரம், மயூகம், மிதிலை, தாயபாகம் முதலிய அந்தந்த மாகாணங்களில் கையாளப்படும் எல்லா முறைகளும், விவாகமாகாத பெண்ணின் ஸ்திரீதன சொத்தின் வாரிசு கிரமத்தைப்பற்றி ஒரே முகமான அபிப்பிராயத்தைத்தான் வெளியிடுகின்றன. "விவாகமாகாத ஒரு இந்து கன்னிகையினுடைய ஸ்திரீதன சொத்துக்கு வாரிசுதார் முதலில் அவளுடைய சகோதரன்தான். சகோதரன் இல்லாவிட்டால், அந்தச் சொத்து தாயாரைச் சேரும். தாயாரில்லாவிடில் தகப்பன், தகப்பன் இல்லையேல், தகப்பனின் நெருங்கிய சபிந்த பந்துக்கள், அவர்களும் இல்லையேல், தாய் வழிபந்துக்கள்" என்பது உரிமைக் கிரமம்.

வரசுல்கம் கொடுத்த பிறகு, ஒரு பெண் விவாகம் முடியுமுன் இறந்துவிடுவாளேயானல், வரனிடமிருந்து வாங்கிக்கொண்டபரிசு, நகை, சுல்க தொகை எல்லாவற்றையும்--விவாக ஏற்பாட்டிற்காகச் செலவு செய்தது போன பாக்கி தொகையை—பெண்ணின் பெற்றோர்கள் வரனுக்கு திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

**விவாகமான இந்துப்பெண்ணின் ஸ்திரீதன சொத்துக்கு யார்வார்சு?**

இதை நிர்ணயிப்பதற்கு முன், மேற்படி சொத்து, கீழ் சொல்லப்படும் நான்குவகைகளில், எவ்வகையைச்சேர்ந்தது எனத் தெரியவேண்டியது அவசியம்.

இதற்காக ஸ்திரீதன சொத்தை (1) யவுதகம் (2) சுல்கம் (3) பர்த்திரு தத்தம், அன்வதேயகம், (4)பிற வகை டெக்னிகல் ஸ்திரீதனங்கள் என்று நான்கு பிரிவாக பிரித்துக் கூறுகின்றனர் சாஸ்திரக்காரர்.

(1) யவுதகம் என்பது விவாக காலத்தில் பெண்ணுக்கு கொடுக்கிற பரிசு வகைகளைச் சேர்ந்தது (யவுத்—சேர்ந்திருப்பது) தம்பதிகள் மணவறையில் சேர்ந்திருக்கும்போது என்பது தாத்பரியம்.

(2) சுல்கம் என்பது வரன், பெண்ணுக்கு நகை, பாத்திரம், பசு முதலிய பொருள்களுக்கு ஈடாகக் கொடுக்கும் தொகை.

(3) பர்த்துரு தத்தம்—கணவனல் மனைவிக்குக் கொடுத்தது.

அன்வதேயம் — பந்துக்களால், விவாகத்திற்குப் பிறகு பெண்ணுக்குக் கொடுத்தவை.

(4) டெக்னிகல்—ஸ்ம்ருதிகள் கூறும் மற்ற டெக்னிகல் வகையைச்சேர்ந்தஸ்திரீதனம்அனைத்தும்.

நிற்க (1) வாரிசுரிமை முறையில் வந்த ஸ்திரீதன சொத்து (2) தான் சம்பாதித்த சொத்து (சுயார்ஜிதம்) (3) ஜீவனம்ச சொத்து (4) அன்னியரிடமிருந்து உயில் மூலமோ, தானமாகவோ கிடைத்த சொத்து. இவ்வகைச் சொத்துக்கள் யாவும் 'டெக்னிகல் அல்லாத ஸ்திரீதன சொத்து' என்றபடியால் அவைகளின் வாரிசுரிமை வேறுவிதமாகும். அவைகள் இந்த நான்குவகைக்குள் சேரா. ஒரு பெண்ணுக்கு விவாக காலத்தில் கொடுக்கப்படும் சுல்கம் பம்பாய், பனரிஸ், மிதிலை, மதராஸ் முதலிய மாகாணங்களில்கையாளப்படும் முறைப்படி அவளுடைய சகோதரர்களைச் சேரும், சகோதரர்கள் இல்லாவிட்டால், தாயார், தகப்பன், தகப்பன்வழி பந்து, தாய்வழி பந்து, என கிரமப்படி வாரிசுரிமை ஏற்படும்.

வங்காளத்தில் கையாளப்படும் தாயபாக முறைப்படி, சொந்த

சகோதரன், தாயார், தகப்பன், கணவன் என்று வரிசைக்கிரமமாக வாரிசுரிமை ஏற்படும்.

பம்பாய் மாகாணத்தில் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. மயூகம், மிதாக்ஷரம். மயூகம் என்பது பம்பாய், குஜராத்து, வட கொங்கணம் முதலிய இடங்களில் கையாளப்படுகின்றது. பம்பாயின் மற்ற பாகங்களில் மிதாக்ஷரம் கையாளப்படுகின்றது. இரண்டு முறைகளுக்கும் சிற்சில வித்தியாசம் உண்டு. அதுபோலவே பனரீஸ், மிதிலை முதலிய முறைகளிலும் சில வித்தியாசங்கள் உண்டு.

மேற்கூறிய முறைகளை இங்கு விவரிக்கவேண்டியதுஇல்லை; அவைகளை விட்டுவிட்டு அதிக வித்தியாசப் படுகிற தாயபாக மிதாக்ஷர முறைகளையே இங்கே விவரிப்போம்.

எல்லா முறைப்படி சுல்கத்திற்கு வாரிசுக்ரமம் சொல்லியாகிவிட்டது. மற்றைய வகை ஸ்திரீதன சொத்தின் வாரிசுக் கிரமம் எப்படி?

தாயபாக முறைப்படி யவுதகம் எனப்படுகிற ஸ்திரீதன சொத்திற்கு வாரிசு கிரமம் கீழ்வரும் முறைப்படி ஏற்படுகிறது.

(1) நிச்சயதார்த்தம் செய்யப் படாத கன்னிப் பெண் (மகள்) முதல் வாரிசு; அவள் இல்லையானல்,

(2) நிச்சயதார்த்தம் செய்யப் பட்ட கன்னிகைப் பெண்.

(3) புத்திரனை பெறக்கூடிய விவாகமான பெண் (மகள்)

(4) விவாகமான மலடிப்பெண், புத்திரப்பேறு அற்றவிதந்துப்பெண் (மகள்), இவ்விருவருக்கும் சம பாகம்.

இவர்கள் இல்லாவிட்டால்

(5) பிள்ளைகள்.

(6) பெண்ணின் பிள்ளை

(7) பிள்ளையின் பிள்ளை

(8) பிள்ளையின் பேரப்பிள்ளை

(9) சகக்களத்திப் பிள்ளை (Step Son)

(10) சகக்களத்தியின் பேரப் பிள்ளை

(11) சகக்களத்திப் பிள்ளையின் பேரப்பிள்ளை

இவர்களில் எவரும் இல்லாவிட்டால் சொத்துக்குடையவள் யுக்த முறைப்படி (approved form) விவாகமானவளானல் அவளுடைய கணவன், சகோதரன், தாய், தகப்பன் என வாரிசுரிமைக்கிரமம் ஏற்படும்.

சொத்துக்குடையவள் (unapproved form) அயுக்த முறைப்படி விவாகமானவளானல், அப்பொழுது யவுதகம் கீழ்வரும் முறைப்படி வாரிசுதாரர்களைச் சேருகிறது.

(1) தாயார், (2) தகப்பன் (3) சகோதரன், (4) கணவன் இவர்களில் எவரும் இல்லாவிடில்.

(1) கணவனின் இளைய சகோதரன்

(2) கணவனின் சகோதரன் பிள்ளை

(3) சொந்த சகோதரிப்பிள்ளை

(4) கணவனின் சகோதரிப்பிள்ளை

(5) தன் சகோதரனின் பிள்ளை

(6) மகளின் கணவன்.

இவர்களே வரிசைக்கிரமப்படி வாரிசுதார்கள். இவர்களும் இல்லாவிட்டால் கணவனின் சபிந்த பந்துக்கள், தகப்பனின் சபிந்த பந்துக்கள் இவர்களைச் சேரும்.

தாயபாக முறைப்படி தகப்பனல் விவாகத்திற்குப் பிறகு கொடுக்கப் பட்ட பரிசுகள் தானசொத்துக்கள் இவையும் யவுதக ஸ்திரீதனம்போல தான் வாரிசுதாரர்களை அடையும். ஆனல் இரண்டே மாறுதல்களுடன் அதாவது, விவாகமான மகளுக்கு

முன், பிள்ளைகளை அடையும். யவுதகம் அப்படி இல்லை. விவாகமான பெண்ணுக்குப்பிறகுதான் பிள்ளைக் குப்போகும்.

சொத்துக்குடையவள், சந்ததி இல்லாமல் இறப்பாளானால், அப்பொழுது இவ்வகை ஸ்திரீதனம் (1) சகோதரன், (2) தாயார் (3) தகப்பனார் (4) கணவன் என்ற வரிசைக்கிரமத்தில் போய்ச்சேரும்.

அன்னியர், பந்துக்கள்மூலம் கிடைத்த பரிசுகள். தான சொத்துக்கள், விவாகத்திற்கு முன்போ பின்போ கிடைத்தது தாயபாக முறைப்படி அயவுத்தக ஸ்திரீதனம் எனப்படும், அத்தகைய சொத்துக்கு வாரிசுகிரமம். கீழ்வரும்முறைப்படி.

(1) பிள்ளைகள், விவாகமாகாத பெண்கள் சமமாக எடுத்துக் கொள்வது.

(2) பிள்ளை பெறக்கூடிய விவாகமான பெண்கள்.

(3) பிள்ளையின் பிள்ளை.

(4) பெண்ணின் பிள்ளை.

(5) மலடியான விவாகமான பெண்கள், மலடியான விதந்துப் பெண்கள்.

இவர்களில் எவரும் இல்லாவிட்டால், அயவுத்தக ஸ்திரீதனங்கள், சகோதரன், தாயார், தகப்பன், கணவன், என்று வரிசைக்கிரமமாகப் போய்ச் சேருகிறது.

மதராஸில் கையாளப்படும் மிதாக்ஷர முறையைத் தெரிந்துகொள்வது நமக்கு மிகவும் அவசியமாகையால் அதன்படி வாரிசுக் கிரமத்தை ஆராயப்புகுவோம்.

'மிதாக்ஷரமுறை ஸ்திரீதன சொத்தை இருவகையாகப் பிரித்துக் கூறுகிறது. (1) சுல்கம் (2) மற்ற வகை ஸ்திரீதனம் என்று. சுல்கத்தைப்பற்றி முன்பே கூறியாயிற்று.

மற்றவகை ஸ்திரீதனத்தின் வாரிசுரிமை.

சுல்கமில்லாத மற்றைய ஸ்திரீதனங்கள் எல்லாம் முதலில் பெண்களுக்கும், பெண்களின் சந்ததிக்கும், அவர்களில் எவரும் இல்லை என்றால் தான், பிள்ளைகளுக்கும் பிள்ளை சந்ததிக்கும் போய்ச்சேருகிறதென்பதை முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பிற வாரிசுதாரர்களின் வரிசைக் கிரமத்தைத் தெரிந்துகொள்வோம்.

---


## தற்போது கைவசமுள்ள வை. மு. கோ. நாவல்கள்.

புதிய பதிப்புகள்.

| | | |
|---|---|---|
| 63. | இதயஒலி | 1-12 |
| 54. | புகழ்மாலை | 1-12 |
| 65. | அமுதமொழி (கிளேஸ்) | 2—8 |
| ,, | ,, (சாதா) | 2—0 |
| 66. | பிரதிக்ஞை | 1—0 |
| 62. | பிரார்த்தனை | 1—0 |
| 64. | மலர்ந்த இதழ். பாகம் I. | 1—4 |
| 11. | வீரவஸந்தா | 1—0 |
| 46. | வத்ஸகுமார் | 1—0 |
| 25. | பக்ஷமாலிகா | 0—8 |

முன் பதிப்புகள்

| | | |
|---|---|---|
| 58. | ஞானதீபம் | 2—4 |
| 51. | உணர்ச்சி வெள்ளம் | 2—0 |
| 43. | கானல் நீர் | 1-12 |
| 56. | சுடர் விளக்கு | 0—8 |
| 19. | ஸரஸராஜன் | 0—6 |
| 42. | உளுத்த இதயம் | — |

## நந்தவனம்

கிரீஷ்ம ருதுமலர் (கிளேஸ்) ரூ. 1—8
வர்ஷ ருதுமலர் ,, ,,
ஹேமந்த ருதுமலர் (சாதா) 1—2
சிசிர ருதுமலர் ,, ,,

**வை. மு. ஸ்ரீ. உதயசூரியன் 2-ம் பதிப்பு (கிளேஸ்) 1—4**

# மலர்ந்த இதழ்

சத்தியம், தர்மம்—அதிலும் ஸ்த்ரீ தர்மம்—தெய்வபக்தி, ஒழுக்கம் இந்த நான்குதான் உங்களுக்குச் சொத்துக்கள். உங்களைப் பாது காக்கும் துணைக்கருவிகள். உலகம் ஒரு மாயாவிலாஸம், தொட்டதெல் லாம் மோகம்...மயக்கம். அனித்யத் தையே நித்யமென மயங்கச்செய் யும் பொய்வலைகள். பல பாகங்களி லும் விரிந்து கால்களைப்பற்றிக் கர கரவென்று இழுக்கும் அவைகளை லக்ஷியம் செய்யாமல் துச்சமென உதறித்தள்ளி சதா இதயத்தில் தைரியலக்ஷ்மியையும் நாராயண னையும் பராசக்தியையும் பூஜித்து அவர்கள் துணைகொண்டு நடந்தால் நெருப்பில் சகலமும் பொசுங்கிவிடு வதுபோல் மேல் சொல்லியவைகள் தாமாகப் பொசுங்கிவிடும். அல்பத் திற்கு ஆசைகொண்டு மனத்தைச் சபலிக்கவிட்டால் ஆயுள் பூராவும் துன்பக்கனலில் தவிக்கும் கதிதான் உண்டாகும்.

நீங்கள் உங்களுக்கென வாழாது உலகுக்கெனவே வாழவேண்டும். பரோபகாரம், இதம்சரீரம், என்கிற வேதவாக்கு நினைவில் வேரூன்ற



வேண்டும். உதாரணமாக ஒரு செடியை, மரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அபரிமிதமான பரிமளம் மிக்க பலவிதமான புஷ்பங்களையும், கனிகளையும் தானே உண்டாக்கி அதனால் ஒரு அணுப்ரமாணம்கூட தான் சுயநலத்துடன் பலனடையாமல் பிறருக்குக் கொடுத்து உதவி புரிந்து அந்த இன்பத்தைத்தானடைந்து வானளாவி நின்று ஆனந்தத் தாண்டவம் புரிகின்ற காக்ஷியைப் பார்க்கும்போதே நமது உயர்ந்த மானிடப் பிறவி வெட்கித் தான் தலைகுனியவேண்டியிருக்கிறது. ஏன்? நம்மிடம் அத்தகைய சிறந்த த்யாக உணர்ச்சியோ, புத்தியோ, லக்ஷத்திற்கு ஒருவருக்கு இருக்கிறதா என்றால் அதுவும் சந்தேகந்தான்.

ஆறறிவுபடைத்த உயர்ந்தமானிட ஜன்மம் கொண்ட நாம் சுயநலத்தையும் கர்வத்தையும் அடைந்து பாழாகிறோம். சக்கரையும் உப்பும் பாருங்கள். தம்முருவத்தையே கரைத்துக்கொண்டு முற்றிலும் த்யாகத்தைச் செய்து பிறருக்கு பூர்ண உதவியை அளிக்கும் மகத்தான பெருமையை அடைந்திருக்கின்றன. அதுபோல் நீங்கள் வாழ்க்கையில் பரிசுத்தத்தை முதன்மையாகக் கொண்டு உங்களுக்கு வந்துள்ள வித்தைகளால் பொதுநல ஸேவைசெய்து நல்ல சத்மார்க்கத்தில் காலத்தைக் கடத்தி நல்ல பெயரை நிலயத்திற்கும் சம்பாதித்துக் கொடுங்கள். இதுதான் நான் வேண்டுவது. நீங்கள் தினம் தூங்கி விழிக்கும்போதும், மீண்டும் படுத்துக்கொள்ளும்போதும், "பரமாத்மா எனக்கு திடவைராக்ய சித்தத்தையும் பரோபகார குணத்தையும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும். உன்னடி மறவாதிருக்கவும் உன்னடியார்க்குப் பணிசெய்துகிடக்கவும் எனக்கு சக்தியைக்கொடு"... என்று வேண்டிக்கொள்ளுங்கள்.. சந்தோஷமாக போய்வாருங்கள். ஒவ்வொரு வருஷத்திலும் ஒருமாத லீவில் உங்களை இங்கு அனுப்பும்படி நான் ஏற்பாடு செய்கிறேன்... பகவான் உங்களைக் காப்பாராக."

என்று பெரியப்ரஸங்கம்போலும் தேன்மாரி பொழிவதுபோலும் புத்திமதிகளைச் சொல்லி தைரியப்படுத்தினாள். பெண்மணிகள் ஆனந்தத்தினால் மெய்சிலிர்த்துக் கண்ணீர் உதிர்த்தார்கள். அவர்களில் நமது அகிலாவும்புஷ்பவல்லி என்கிறபெயரில் வீற்றிருந்தாள் என்று கூற வேண்டுமா! அவளுக்கு இதைக் கேட்ட உடனே துக்கம் துக்கமாகப் பிறிக்கொண்டுவந்தது. சிறு குழந்தையைப்போல் கோவெனக் கதறி யழுதவாறு தலைவியின் முன்பு ஓடிவந்து அவள் காலில்விழுந்து 'தாயே! உங்களை விட்டு நான் ஒருபொழுதும் பிரியவேமாட்டேன். எனக்கு எந்த தொழிலும் வேண்டாம். பகவன் நாமபஜனையும் தங்கள் தரிசனமும் எனக்குப் போதும். நான் தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ஆகையால் என்னையனுப்பக் கூடாது" என்று கெஞ்சினாள்.

மீராபாய் நகைத்துக்கொண்டே புஷ்பாவைத் தட்டிக்கொடுத்து அவளைச் சமாதானம் செய்தபடியே, "புஷ்பா! உன்னை அனுப்பாமல் நான் வைத்துக்கொண்டால் உன்னுடைய வாழ்நாளில் நீபிறருக்கு உழைத்துப் பேர் பெறும் பாக்யம் கிடைக்கமுடியுமா! மனிதஜென்மமெடுத்த எவரும் பக்வானால் கொடுக்கப்பட்ட தன் குடும்பத்திற்கு உழைப்பதென்பது உலக நியதி. அந்த அபாக்யத்திற்கு அருகதையற்ற உன்போன்றபெண்கள் உத்தம வழியில் காலத்தைக்

கடத்தும்போதுகூட, கடலுக்கு அணிலும் அணைகட்டியதுபோல், ஒரு சிறுஉபகாரமாவது பிறருக்குச் செய்வதுதான் ஜென்மார்த்தகமாகும். உன் ச்ரமத்தினுல் சம்பாதிக்கும் த்ரவ்யத்தை உன் கையினுலேயே உன் மனம் களிக்க ஏழைகளுக்கு தானத்தைச்செய்தும்வேறு விதங்களில் உதவியும் இம்மையிலேயே ஆனந்தத்தைத்தேடிக்கொள்வதுதான் உசிதம்.

சில தனவந்தர்கள் தங்கள் கண்ணுல் கண்டுகளிக்கும்படிஎத்தகைய நல்ல காரியங்களையும் செய்யாமல், சாகும்போது உயில் எழுதிவைத்துவிட்டுப் போகிறுர்கள். உயிலில் கண்டபடி அதைச் செய்கிறுர்களா! என்பதுதான் சந்தேகம். அகப்பட்டதை விழுங்கும் அரக்கர்களின் தாண்டவத்தில் புண்ணியம் பாவமாகவே மாறிவிடவும்கூடும்.

சிறந்த கல்விதானம், கல்யாணதானம், ப்ரஸவ ஆஸ்பத்திரியில் உதவிதானம் முதலியவைகளுக்காக தனவான் ஒதுக்கிவைத்த பணத்தை குடிக்கும், கூத்திக்கும், துர்வினியோகத்திற்கும் செலவிட்டால் தனவானுக்குப் பாபம் வருமா! புண்ணியம் வருமா! நீயே சொல்லு காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.என்கிறபடி புண்ணியத்தைச் செய்வதற்குத்தான் முதன்மையாகக் கொள்ள வேண்டும். காலணு தானம்கொடுக்க வேண்டுமாயினும் உன் கையினுலேயே கொடுத்துவிடவேண்டும். நாளை என்று ஒதுக்கக்கூடாது. செத்த பிறகு சிவலோகம் வைகுண்டம் என்றும் நம்பி பிறர் கையில் ஒப்படைக்கக்கூடாது. தெரிந்ததா!

புஷ்பா! உனது சங்கீதம் மகோன்னதமானது. அதி மாதுர்யமானது. ஆதியில் என்னுடைய தலைவிதி என்னை எல்லா அம்சங்களிலும் அதபாதாளத்தில் தள்ளியபோதிலும் எனது விலைமதிப்பற்ற மதுரகீதம் ஒன்றுதான் என்னை ரக்ஷித்தது. இன்றும் என்றும் ரக்ஷித்துவரும் சிறந்த ஆத்ம துணை நேயன்போல் அமைந்துள்ளது. அவ்வாறே உன் சங்கீதத்தினுல் உனக்கு துக்கம் மறைந்து சுகமும் புண்ணியமும் உண்டாகும் என்று என் அந்தராத்மா கூறுகிறது.நீ சற்றும் பயப்படாதே...நீ பயப்படும் காரணத்தை நானறிவேன். உனது சொந்தக்காரர்கள் யாரேனும் உன்னைப் பார்த்துவிட்டால் என்னசெய்வதுஎன்றுதான் அஞ்சுகிருய். இனி அந்த பயம் உனக்கு லவலேசமும் வேண்டாம். அப்படி உன்னை அறிந்தாலும்கூட நீ லக்ஷியம்செய்யாதே. ஸ்ரீ த்யாகராஜர் பாடியதுபோல், ஸீதம்ம மாயம்ம ஸ்ரீராமுலு மாதன்ட்ரி என்கிற பாட்டை பாடிக்காட்டி இவர்கள்தான் எனது மனிதர்கள், இனி நீங்களல்ல. என்று ஸ்ரீமன் நாராயணமூர்த்தியை நம்பி தைரியமாகக் கூறிவிடு. அந்த பரந்தாமன் உன்னைக் காப்பான். இதுதான் உனக்கு நான் சொல்லப்போகும் புத்திமதியாகும். அழாதேம்மா! மற்றவர்களைப்போல் நீ கையினுல் பாடுபடமுடியாத குறையை நிவர்த்தித்தே உனக்கு பகவான் அபாரமான சங்கீதத்தை அளித்துவிட்டார். அதை பயன்படப் பாடி பலநோயாளிகளின் நோயைத் தீர்த்து அவர்களைச் சாந்தியடையச் செய்...கலங்காதே பகவானை நம்பு. அவன் பாதங்கள்தான் உனக்குத் துணை.'' என்று தைரியம் கூறித் தேற்றினாள். அகிலாவின் மனது எதிலும் சமாதானமடையாது குழம்பியது; எனினும் தலைவியின் வார்த்தைகள் தற்கால சாந்தியாக ஒரு சிறிது நிம்மதியை அளித்தன.

அல்லிராஜ்யம் என்றும் பெண் களையாளம் என்றும் பேச்சளவிலே கேட்டிருக்கிறோமேயன்றிப் பார்த்த தில்லை, இந்த கோகுலம் என்கிற இடமே அல்லிராஜ்யத்தைவிட அதி சயராஜ்யமாகவன்றோ இருக்கிறது. சாக்ஷாத் வைகுண்டம், அது இது என்று சொல்கிறார்களேயன்றி யார் பார்த்திருக்கிறார்கள்? இந்தகோகுலத் திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கோவிலைவிட அந்த வைகுந்தத்தில் என்ன உசத்தியிருக்கமுடியும்? பக வானுக்கு கல்கட்டடக் கோயிலைவிட உள்ளன் புள்ள மெய் பக்தர்களின் தூயபக்தி நிறைந்த பரிசுத்தமான இதயமே சிறந்த கோயிலாகக் கொண்டு பரம ப்ரீதியுடன் எழுந் தருளி இன்ப சாகரத்தில் தானும் அளைந்து பக்தர்களையும் திளையச் செய்கிறான் என்கிற சிறந்த உண் மையை இங்கு கண்கூடாகக் காண் கிறேன்.

கருங்கல்லில் கட்டியுள்ள இவ் வாலயத்தைவிட அந்த பரமபாகவத சிகாமணியாகிய மீராபாயின் உள் ளக்கோயிலில் பகவான் பரிபூர்ண நிர்த்தனம் செய்வதால்தான் இத்த கைய சிறந்த முறையில் அஸகாய சூரமான காரியத்தை வெகு எளி தில் செய்துமுடிக்கும் திறமை உண்டாகியிருக்கிறது.

எல்லா ஸ்தலங்களையும்விட திருப் பதி கோயிலுக்குச்செல்கையில்தான் எத்தகைய நாஸ்திகனுக்குக்கூட மெய் சிலிர்த்து ஒரு விதமான பய பக்தி உணர்ச்சி தானாக உண்டாகும் என்பார்கள். இந்த இடத்தையும் அந்தம்மாளையும் பார்க்கும்போது மேல்படி உணர்ச்சி இன்னும் அபரி மிதமாக உண்டாகிறது. என்ன ஆச்சரியப்பிறவி!" ...

என்று ஆத்மநாதன் ப்ரமாதமாய் வியந்தவாறு அந்த கோகுலம் முழு வதையும் சுற்றிப்பார்த்தான். பெண் களின் ஒழுக்கமும் சீலமும் சுடர் விளக்காய் ப்ரகாசிப்பதைக் காண அவன் உள்ளம் வியப்புக்கடலில் மூழ்கியது. மீராபாய் தானே நேராக எதுவுமே பேசவில்லை. அவளுடைய மாமனாரே ஆத்மநாதனுக்கு சகலத் தையும் விவரித்துக்கூறியதோடு தனது நாட்டுப்பெண்ணை ஒருசிறந்த பத்தினிக்கடவுள் என்றும் புகழ்ந்து கூறினார்.

மாலை 5 மணிக்கு பூஜாமண்டபத் தில் முன்னேற்பாடுபடி தலைவியின் தலைமையில் முதலில் அவனுக்கு வேண்டியசங்கீதம் ஆரம்பமாயிற்று. நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்கக் கூடியபெண்மணிகள் வெகு அத்புத மாகப் பாடினார்கள். அந்த கணக் கில் அகிலாவும் ஒருத்தி என்று கூற வேண்டுவதில்லை. அவள் உண்மை யில் அழுதாள் என்றால் மிகையா காது ஆனால் அந்த ப்ரலாபம் அத் புதமான மதுரத்துடன் தேன்மாரி போல் சங்கீத ப்ரவாகத்தையே உண்டாக்கியது. ப்ரபந்தத்தில் திரு மாலையிலுள்ள, ஊரிலேன் காணி யில்லை, உறவு மற்றொருவரில்லை. என்கிற பாசுரத்தையே இசைத் தேனுடன் கலந்து வர்ஷித்தாள்.

தலைவியே அன்று அகிலாவின் கீதத்தைக்கேட்டு மெய்மறந்தாள். பிறகு சகல பரீக்ஷைகளும் நடந்தன. ஆத்மநாதனின் ஆனந்தம் எல்லை கடந்தது. தலைவி மீராவின் கானத் தையும் கேட்ட ஆத்மநாதன் உருகி மூர்ச்சித்தே போய்விட்டான். அந்த புனிதவதியின் கானத்தை மின்ஸார விசைகொண்டு தனது ஆஸ்பத்திரி பூராவும் ஒலிபரப்பவேண்டுமென் றும் மாதம் ஆயிரம் ரூபாய் இந்த ரக்ஷகாலயத்திற்கு நன்கொடை

கொடுப்பதென்று முடிவு செய்து கொண்டான்.

பிறகு தனக்கு வேண்டிய லேடி டாக்டர்கள், நர்ஸுகள், காயகிகள் முதலியவர்களைமட்டும் முதலில் குறிப்பிட்டு அழைத்துக்கொண்டான். மற்றபடி மறுமுறை வருவதாகவும், இந்த பெண்களின் ரக்ஷணையைத் தங்களைப்போலவே நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று ப்ரமாண பூர்வகமான உறுதியைக் கொடுத்துவிட்டு மறுநாளே தனி ஸெலூன் ஏற்பாடு செய்துகொண்டு கிளம்பத் தயாரானன்.

தலைவியைப் பிரிய மாணவிகள் கண்ணீர்விட்டுக் கதறினர்கள். தலைவி எல்லோரையும் அணைத்து ஆசிகூறிப் பின், "பெண்மணிகளே! பகவான் மீது ஆணையாக உங்கள் முதல் கடமை உங்கள் கற்பைக் காப்பாற்றிக்கொண்டு கண்ணியமாக உங்கள் வேலையைச் செய்யுங்கள். பகவான் உங்களுக்கு என்றென்றும் நல்லபுத்தியைக்கொடுத்து சீலவதிகளாயும் என்றும் அழியாத நல்ல உத்தமிகள் என்கிற நிலையில் வைத்தும் ரக்ஷிக்கவேண்டுகிறேன். கனவிலும் இழிகுணத்திற்கும் சபலத்திற்கும் இடங்கொடுக்காதேயுங்கள். ஜாக்ரதையாய் காரியத்தில் கண்ணாய் காலத்தைக்கடத்தி நல்ல பெயருடன் உலகத்திற்கு உபகாரமாய் வாழுங்கள்" என்று புத்திமதி கூறி ஆசீர்வதித்து அனுப்பினள்.

அகிலாவுக்குப் போவதற்கு மனமே இல்லாமல் இரவு பகலாகக் கண்ணீர்விட்டாள். தன்னைப்பெற்ற தாய்போல் இதுவரையில் ஆதரித்து வந்தவளின் வார்த்தையைத் தட்டக் கூடாதென்கிற நோக்கத்துடன் மனத்தை திடப்படுத்திக்கொண்டு கிளம்பினள். ஆனல் அவள் இங்கு வந்தவுடன் மாறிய வேஷத்தை மறுபடியும் கலைக்கவில்லை. வடநாட்டு பெண்கள் மரியாதைப்பட்டவர்களைக்கண்டால் முகத்தைமுற்றிலும் மூடிக்கொள்வதுபோலவே செய்து வந்தாள். கருப்புக் கண்ணாடியும் அவளுக்கு சகாயம் செய்தது.

ஆத்மநாதன் தலைவிக்கும் மற்றவர்களுக்கும்வந்தனத்தைச்செலுத்திவிட்டு எல்லோரையும் அழைத்துக்கொண்டு கிளம்பினன். மீராபாயிக்கு இத்தனை பெண்களும் தன்னைவிட்டுப் பிரிந்துவிட்டதில் துக்கம் அதிகமாக பாதித்ததைவிட சர்வலோகரக்ஷகன் அவர்களுக்கும் ஒரு உத்தமமான வழியைக் காட்டி ரக்ஷிக்க முன்வந்ததை எண்ணி அளப்பரிய ஆனந்தமேயுண்டாயது.

## 45

சஞ்சீவிபுரத்து ஆஸ்பத்திரியே அன்று புதிய திருவிழா நடப்பது போல் தோன்றியது. ஸ்ரீமதி அமராபாய், ஆத்மநாதன், டாக்டர் வஸுந்தராதேவி கோகுல்நாத் ஆகிய எல்லோரும் ரக்ஷகாலயத்திலிருந்துவந்தவர்களை வரவேற்பதில் தடபுடலாக ஈடுபட்டார்கள். வந்தவர்களும் ஆஸ்பத்திரியையும் அதன் நூதன நிர்மாண திட்டத்தையும்பார்த்து வியப்படைந்து சிலர் தடபுடலாகப் பேசினர்கள். சிலர் மவுனமாகவே இருந்தார்கள்.

அகிலாபாய் அங்கு வந்தவுடனேயே அமராபாய் தன்னருமைக் குழந்தையுடன் வெகு உத்ஸாகத்துடன் எல்லோரையும் வரவேற்பதை தூரத்திலிருந்து பார்த்தவுடனே அப்படியே அவளை பூமியுடன் தட்டாமாலை சுத்துவதுபோல் சுற்றியது. "என்ன! அமராபாயா! ... அமராவா இங்கிருப்பது? ... அவள் பக்கலிலிருப்பது அவள் கணவரா ... என்ன ... ... என்ன ... .ஒன்றுமே புரியவில்லையே ... ... கடவுள் செய்த

சோதனைகளெல்லாம் போதா தென்று இன்னும் என்னென்ன விபரீதத்தை நடத்திக்காட்டி என்னை சோதிக்கும் பொருட்டு இம்மாதிரி செய்திருக்கிறாரோ தெரியவில்லையே! நான் உலகத்தையேவிட்டு மறைந்து விட்டதாக எண்ணியிருக்கும்போது குண்டுபோல் எதிரிலிருப்பதைக் கண்டால் என்ன நினைப்பார்கள்... ஐயோ! இத்தனை நாட்கள் சென்று என்னுருயிர் நேசியைக் கண்டும் நேரில் சென்று அளவளாவும் பாக்ய மில்லாதிருக்கிறதே!......

ஏன்?......நாம் எதிரில் சென்று ப்ரிய சினேகிதி என்று கட்டிக் கொண்டால் என்ன......ஆ....முடியாது...இனி இஜ்ஜென்மாவில் அது முடியாது...ஒரு வேளை அமரா என்னைத் தெரிந்துகொண்டுவிட்டால்.... என்ன தர்மசங்கடம்!........என்று அவளையறியாத அதிர்ச்சியுடன் திகைத்து நின்றதில் தான் எங்கிருக்கிறோம், என்ன செய்கிறோம் என்பதையே மறந்தாள்.

இவளுடைய புதிய வேஷத்தினால் இவளை எளிதில் அமரா கண்டு கொள்ள முடியவில்லை. அன்று தடபுடல் உபசாரங்கள் நடந்தன. பாடத் தெரிந்தவர்களை எல்லாம் அன்று மைக்குக்கு முன்பு பாடச் செய்தார்கள். அகிலாபாயால் பாடவே முடியாது போய்விட்டதால் "இன்று என்னை மன்னித்துவிடுங்கள், நாளை கட்டாயம் பாடுகிறேன்" என்று வேண்டிக்கொண்டாள்.

இவர்களுக்கெல்லாம் தனியாக விடப்பட்டிருந்த இடத்தில் எல்லோரும் தனித் தனி விடுதியில் இருந்தார்கள். அமராபாயும் வஸுந்தரா தேவியும் எல்லோரையும் சாவகாசமாகத் தனித் தனியே விசாரித்துக் கொண்டுவந்தார்கள். அகிலாபாயின் அறையில் நுழைந்ததும் அகிலாவைத் தூக்கிவாரிப் போட்டது. முக்காடை நன்றாக இழுத்துப் போட்டுக் கொண்டு "வாருங்கள். உட்காருங்கள்" என்று மெல்ல ப்ரயாஸையுடன் உபசரித்தாள்,

நேற்று ப்ரயாண அலுப்பால் உடம்பு சரியில்லை என்று பெரிய டாக்டர் சொன்னார். அதனால் பார்க்க வந்தோம். உடம்பு தேவலையா?" என்று கூறியவாறு வஸுந்தரா அவளைத் தொட்டுப் பார்த்தாள். "இதென்ன ஜுரமல்லவா காயுகிறது...ஏனம்மா, ஜுரம்எப்போது வந்தது?"......என்று அன்புடன் கேட்டாள்.

அகிலாவுக்கு அவளையறியாத ஒரு சோகச்சிரிப்புதான் வந்தது..."உம் ...இது எனக்கு மிகவும் சகஜம். ஜுரம்போல் காய்வது ஜுரமல்ல.. ...என்பிறவிஉஷ்ணம்"...என்றாள். இதைக் கேட்ட அமராபாய் வஸுந்தராவுடன்...."டாக்டர்! இந்தம்மாளைப் பார்த்தால் என் சினேகிதை அகிலாபாய் என்று ஒருத்தியின் நினைவே வருகிறது......அவளைப் பார்த்து எத்தனையோ யுகங்களாகிவிட்டன. குரல் அதேமாதிரியிருக்கிறது. அவளுடைய சாயலிலாவது மற்றொருத்தியைப் பார்த்ததில் என் னிதயத்தில் சந்தோஷம் தாண்டவமாடுகிறது"...என்று ஆங்கிலத்தில் கூறியதைக் கேட்ட அகிலாவின் கண்களில் நீர் முட்டிவிட்டது.

அதே சமயம் டாக்டர் ஆத்மநாதனும் கோகுலநாதனும் இவ்வறையில் ப்ரவேசித்து..."அம்மணீ! உடம்பு தேவலையா...ஓ...நீங்கள்கூட இங்கு தானிருக்கிறீர்களா!...என்றுகேட்டவாறு உட்கார்ந்தார்கள். அகிலா முக்காடை முற்றிலும் இழுத்து மரியாதையாக மூடிக்கொண்டு "தேவலை"..........என்றுமட்டும் கூறினாள்.

அகிலா எத்தனை அடக்கியும் புதைந்துகிடந்த சிநேக உணர்ச்சி அவள் நெஞ்சில் வெடித்துவிடும் போல் கொந்தளிக்கின்றது. முகத்தையும் சம்பிரதாயப்படி மூடிக் கொண்டுவிட்டதால் அமராவையும் அவள் கணவனையும் இமைஇசைக்காமல் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்தாள். அமராவிடமிருந்து குழந்தையை வாங்கி ஆவல்தீர முத்தமிட்டாள். ஆனந்த உணர்ச்சி கட்டுமீறியதால் நரம்புகளெல்லாம் படபடத்துத் துடிக்கின்றன. தேகம் அவளையறியாது நடுங்குவது போலிருக்கிறது. குழந்தையை மார்போடு மார்பாய் அணைத்தவள் விடவே இல்லை.

"ஐயோ! பாவம்! குழந்தைகள் என்றால் உயிர் போலிருக்கிறது. உம். இவளுடைய வாழ்க்கைப் பாதாளத்தில் எத்தகைய மர்மங்கள் புதைந்து கிடக்கின்றனவோ! பாவம்! யாரறிய முடியும்? பிறவிக் கைதியைப்போல் இருந்திருக்க வேண்டும். இன்று குழந்தைகளைப் பார்த்ததும் இயற்கை வெள்ளம் முன்னேக்கிப் போராடி அதுவே வெற்றிபெற்றதுபோல் ஆசை குமுறுகிறது" என்று ஒவ்வொருவரும் நினைத்தார்கள்.

அமராமட்டும் "உம்...நீ குங்குமமணிந்திருப்பதால் விதவையல்லவென்று தெரிகிறது. கன்னியோ! அல்லது கணவனால் விலக்கப்பட்டவளோ!....கன்னியாகவிருந்தால் இனிமேல் உலகத்தவரைப்போல்... என்று முடிப்பதற்குள் அகிலாவின் இதயம் உடைந்து திடீரென்று தாங்கமுடியாத அழுகை விம்மிக் கொண்டு வந்துவிட்டதால் குழந்தையுடன் சடக்கென்று வேறு இடத்திற்குப் போய்விட்டாள்.

அமராபாய் திகைத்துப்போய் பின்னாலேயே ஓடி....."அம்மணி! மன்னித்துவிடுங்கள்...நான் போகிறேன். குழந்தையைக் கொடுக்கிறீர்களா! அல்லது அதோ தெரிகிறதே அதுதான் என் வீடு. சிறிதுநேரம் கழித்து அங்கு கொண்டுவந்து கொடுக்கிறீர்களா?" என்று கேட்டாள். பிறகு கொண்டுவந்து விடுவதாகக் கூறி குழந்தையை நிறுத்திக் கொண்டாள்.

வந்தவர்கள் பரிதாபத்துடன் சென்றார்கள். அன்று வெகுநேரம் வரையில் அகிலாவின் விம்மலும் பொருமலும் நிற்கவேயில்லை. குழந்தையைக் குலாவுகிறாள். தின்பண்டங்கள் கொடுக்கிறாள். எந்திரம் போல் ஏதோ செய்கிறாளேயன்றி அவளுடைய சிந்தனை அலைகள் சிதறுண்டு பல வருடங்களுக்கு முன்பு இழுத்துச்சென்று கொந்தளிக்கின்றன. ஏதேதோ நினைக்கிறாள்... உடனே பயித்தியம்போல் துள்ளுகிறாள். "நாம் ஏன் அமராவிடம் ஒளிக்கவேண்டும்?" என்று ஒரு துணிபு கொள்கிறாள். அடுத்தக்ஷணமே "வேண்டாம்" என்றுநினைக்கிறாள்... அவளுடைய நிலைமையே படுமோசமாக ஆய்விட்டது. தான் ஏன் இங்கு வந்து சேர்ந்தோம் என்கிற எண்ணந்தான் வானளாவி நின்றது.

## 46

இரவு 9 மணிக்குமேலாகிவிட்டது. எங்கும் நிலவொளி பரந்து கொந்தளிக்கின்றது. சஞ்சீவிபுரம் ஆஸ்பத்திரியில் கானமழை வர்ஷித்து நோயாளிகள் முதல் சசலரையும் தன் வசமாக்கி வசீகரித்து ஆனந்தப்ரவாகத்தில் மிதக்கச் செய்கின்றது. ஆத்மநாதன்முதல் சகலரும் "ஆஹஹா... என்ன அத்புதகானம்! என்ன மதுர கானம்"... என்று பரவசமாகி இருந்த இடத்திலிருந்தே சபாஷ் போட்டு ஆர்ப்பரிக்கின்றார்கள்.

கானம் வரவர ஆனந்த பூர்த்தியாகி உச்சஸ்தானத்தைஎட்டி ஆகாசத்தில் வட்டமிட்டுப் பறக்கும் பறவைபோல் துள்ளிப்பறந்து மக்களின் இதயத்தில் தாங்கமாட்டாத களிவெறியை அபாரமாக எழுப்பிக் கொந்தளிக்கச் செய்கின்றது.

அமராபாயும் கோகுல்நாதனும் தமது விடுதியின் நிலா முற்றத்தில் உட்கார்ந்து இந்த அபூர்வ கானத்தைக் கேட்டு அமராவின் மனது இன்ப வெள்ளத்தில் மிதந்து, மின்னல்போல் பளிச் பளிச்சென்று ஆதியில் அகிலாவின் கானத்தையே நினைப்பூட்டுகிறது. தான் அகிலாவுக்குச் சொல்லிக்கொடுத்த அதே பாட்டை அப்போதையைவிட அதிகமான அழகுடன் வித்வத் நிறைந்து பாடுவது ஒன்றுதான் வித்யாஸமாகத் தோன்றுகிறதேயன்றி சாக்ஷாத் அகிலாவின் குரல்போலவே...ஏன்...அகிலா பாடுவதுபோன்றுதான் தோன்றுகிறதே.....முக்காடும் கருப்புக் கண்ணாடியும்தான் சற்று திகைக்கச் செய்கிறதேயன்றி ஆமாம்...இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. அகிலாவின் கை விரல்கள் ஆஸ்பத்திரியில் பார்த்தபோது உபயோகமற்றதாகக் காணப்பட்டதே...இவளுடைய விரலை நாம் கவனிக்கவே இல்லையே நாளைக்காலை முதல்முதல் அதை கவனித்துத்தான் மறுகாரியம் செய்யவேண்டும்...அந்த சந்தேகமும் நிவர்த்தியாகிவிட்டால் அவள் அகிலாதான் என்பதில் சந்தேகமே இல்லை...என்று தனக்குள் பலமாக யோசனை செய்துக் குழம்பிக் கொண்டிருந்த சமயம் கோகுல்நாத் ஆனந்தத்தினால் மெய்மறந்துபோய் கண்ணைமூடியவாறுபடுத்திருந்தான்.

அமராவின் குழப்பத்தைத் தற்செயலாக அறிந்த அவன்...“அமரா! என்ன ட[illegible]ான யோசனை?... ஆஹா! என்ன கம்பீர கானம்... இன்னிசைக்கடலில் நம்மைத் திளைக்கச்செய்யும் இந்த இணையற்ற கானத்தைக் கேட்கக் கேட்க உள்ளம் உருகுகிறது...ஏன்...ஏதோ மாதிரி விழிக்கிறாய்?...துக்கக்கண்ணீர் ஏன் பெருகுகிறது?”...என்று கூறியவாறு துடைத்தான்.

அமராவினால் இந்த இசையானந்தத்தையும் சிநேகிதவாஞ்சையையும் தாங்கமுடியாது துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. அவள் புலம்பிக்கொண்டே...“ஆம்...இன்னிசையின் ஆனந்தக்கண்ணீருடன் துக்கமும் பொங்கித்தான் வருகிறது. நானும் நேற்று அந்த மாதரசிவந்தது முதல் கவனித்துவருகிறேன். என்னாருயிர்த்தோழி அகிலாபாயின் நினைவே வருகிறது. அதே சாயல், அதே உயரம், பருமன், குரல்... சகலமும் அப்படியே இருக்கின்றன. என் அன்புக்கினிய அகிலாவுக்கு நான் ஒரு காலத்தில் பாட்டு கற்றுக் கொடுத்தேன். அதே பாட்டை இப்போது இத்தனை அபூர்வமாகப் பாடும்போது என்னுள்ளத்தில் எழும் உணர்ச்சிவெள்ளத்தை அணைகட்ட முடியவில்லை. எத்தனையோ யுகங்களாகிவிட்டன அந்த புனிதவதியைப் பார்த்து...ஒருகால் இந்த புஷ்பாவதி அகிலாவதியாகவிருக்குமோ! என்கிற சந்தேகம் எனக்கு பலமாக போராடுகிறது.

பிறவியிலேயே மகா துர்ப்பாக்யத்தைச் செய்து பிறந்த அந்த உத்தமி உலகையேவிட்டு மறைந்துவிட்டாளோ! என்றுதான் நினைத்தேன்.. ஆனால் நேற்றுமுதல் எனக்கு சந்தேகம் பலமாகப் போராடுகிறது... என்று இவள் சொல்லிக்கொண்டு வருவதைக்கேட்ட கோகுல்நாதன்... “என்ன!...உன் சிநேகிதையா!...

அகிலாபாயா!"...என்று திடுக்கிட்டுக் கேட்கும் சமயம்... இசையமுதம் சோகமும் இன்பமும் ஒன்றுகூடி காட்டாற்று வெள்ளம்போல் ப்ரவாகமாய் பெருக்கெடுத்து அபாரமான மூர்ச்சையலைகளுடன் பெரும் சூருவளிபோல் கொந்தளித்து திக்குமுக்காடச்செய்துத் திணறுகிறது.

பாடுகிறவள் நினைவுதப்பிவிட்டது போன்று குரலில் தடுமாற்றம்... ஆவேசம்...கட்டுக்கடங்காத சோகம்...வெறிபிடித்த அதிர்ச்சி... ஆகியவைகள் ஒரே சமயத்தில் போராட்டத்துடன் எழுந்து பயங்கரத் தாண்டவம் புரிந்து அதே சமயம் பாடலில் வரும்...உன் செவிதான் மந்தமோ...உன் விழிதான் அந்தகமோ! உன்னிதயமென்ன கல்லோ...என்ற இடத்தைப் பாடும் போது அர்த்தத்தை அனுபவித்து பாடகி அப்படியே சோகித்துஉச்சஸ் தாயியில் சஞ்சாரத்தில் நிலைதடுமாறி மூர்ச்சையாகித் தடாரென்று கீழே சாய்ந்துவிட்ட சப்தமும் மைக்கில் வெகு தெளிவாகக் கேட்டதும் எல்லோரும் ஏககாலத்தில் ஹாவென்று கலங்கி "என்ன! என்ன!" என்று பதறியவாறு ஓடினர்கள்.

ஏற்கெனவே கொந்தளிக்கும் அமராவால் தாங்கமுடியாது எல்லை கடந்து விட்டதால் ஒரே ஓட்டமாக ஓடினாள். அவள் கணவனும் பின் தொடர்ந்தான். அங்கு பாடும் இடத்திலிருந்த மைக்கு சம்மந்தப்பட்ட ஆள் உடனே அழைப்புமணியை அடித்தான். அதற்குள் எல்லோரும் ஓட்டமும் நடையுமாக ஓடிவந்தார்கள்.

என்னே பரிதாபம்!...அகிலா பாய் உட்காந்து பாடிக்கொண்டிருந்தவள் குப்புற அப்படியே சாய்ந்துக் கிடந்தாள். விழுந்த அதிர்ச்சியில் கண்ணாடி யொருபுறம் சிதறி உடைந்து "இனி நான் அகிலாவைக் காக்கமுடியாது. அவள்தான் அகிலா என்று உங்களுக்கு அறிவித்துவிட்டு நான் விடை பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறுவது போல் கிடந்தது.

அமராபாய் வருவதற்குள் ஆத்மநாதன் அகிலாவைத் தூக்கி அடுத்த அறைக்குக் கொண்டுபோய் படுக்க வைத்தார். அமரா தலை தெறிக்க ஓடிவந்து..."டாக்டர்!...டாக்டர்!... என்ன நேர்ந்தது?" என்று கதறியவாறு அகிலாவின் மூக்காட்டை விலக்கிவிட்டு முதலில் அவள் கை விரலைப் பார்த்தாள்.

அவளது சந்தேகம் முற்றிலும் நிவர்த்தியாகிவிட்டது. "அகிலா... அகிலா!'...வென்று கதறியழ ஆரம்பித்துவிட்டாள்.

ஆத்மநாதனுக்கு ஆச்சரியம்தாங்க முடியவில்லை. "உன் சினேகிதையா என்று வியப்புற்றவாறு சிகிச்சை செய்கிறார்... இதயம் வெகுவாய் நொந்துபோய் தவித்திருப்பதால் மிகவும் பலவீனப்பட்டு ஓய்ந்து கொண்டு வருவதையறிந்து திடுக்கிட்டார். நம்பிக்கையிழந்த பார்வையுடன் அமராவைப்பார்த்தார்.

அமராவின் துக்கம் பின்னும் பெருகியது. "அகிலா!...அகிலா!"... என்று கதறுகிறாள்..."டாக்டர் உபயோகமில்லையா"...என்று சிறு குழந்தையைப்போல் விம்முகிறாள். கோகுல்நாதனின் நிலைமையை வர்ணிக்கவே முடியவில்லை. ஊசி குத்தியும் மூக்கில் நெடிவைத்தும் பலமான சிகிச்சை செய்தும் சுமார் ஒருமணிகாலம் சென்றதும் அகிலா கண்ணைத்திறந்து பார்த்தாள்.

அப்போது ஆத்மநாதன், இன்னொரு நோயாளி மிக்க ஆபத்தான நிலைமையிலிருப்பதாகச்செய்திவந்து அங்கு போயிருந்ததால் கோகுல்

நாதனும் அமராவும் அகிலாவின் பக்கலிலேயே அமர்ந்திருந்தார்கள், அமராவின் மடியில் அகிலாவின் தலை இருந்தது. அகிலா கண்ணைத் திறந்ததும் சற்று தடுமாறினாள். பிறகு தன் நிலையை நன்கு உணர்ந்து கொண்டாள். அவள் முகத்தில் தோன்றிய ப்ரகாசத்திற்கு எல்லை வைத்துக் கூறமுடியாது. சூரியனைக் கண்ட தாமரையைப்போல் முகமும் இதயமும் விகசிதமுற்று மலர்ந்த இதழ்கள் விரிவதுபோல் விழிகள் விரிந்தன.

கட்டுப்படுத்தமுடியாத ஆவேசத்துடன் "என்னுருயிர் அமராபாய்!" என்று அவளை இறுகத்தழுவி முகத்தோடு முகம் பதித்துக் கண்ணீர் விட்டாள். "அமரா... இனி ஒளிப்பதில் பயனில்லை... கண்டேன் கண்டேன்....கலிதீர்ந்தேன்.....என் கவலை பூராவும் ஒழித்தேன்... நித்யானந்தப் பதவியை அடைந்தேன் ஆனந்த சிகரத்தை எட்டிவிட்டேன். நான் இழந்துவிட்டதாகவே எண்ணிய எனது ப்ராண காந்தரைக் கண்டு களிவெறிகொண்டேன்... இச் சடலத்தில் இன்னும் சில மணி நேரமே என்னுயிர் ஊசலாடும்... அதற்குள் ஒருமுறை... ஒரே ஒரு முறை... என்னுருயிர் ப்ராணபதியின் சரணத்தில் பணிந்து விடை கொள்கிறேன்... அம்மா!... வித்யாசமாக நினைக்காதே... இப் பாவியின் சவத்தை உன்னருமைக் குமாரனின் கரத்தால் கொள்ளியிட்டுப் பொசுக்கச்செய்ய வேண்டுகிறேன். என் கணவருக்குப் பிறந்த பிள்ளை என் பிள்ளையல்லவா.

என்னுருயிர் நேசி! என் கணவரின் கழுத்திலுள்ள தழும்பும் முகச் சாயலும்தான் எனக்கு அவரை அடையாளம்காட்டின. அதோடு கல்யாணகாலத்திலேயே அவருக்கு வயது அதிகமாய்விட்டதால் அதற்கு மேல்நாகரீகஅலங்காரத்தினால்சிறிது மாறுதல் உண்டாகுமேயன்றி முற்றிலும் மனிதச்சாயலே மாறிவிடாது. அதனால் எனக்கு வெகு எளிதில் அறிந்துகொள்ள அனுகூலமாகியது. அதோடு நேற்று உன் குழந்தையைக் கொண்டு விடுவதற்காக உன் வீட்டிற்கு நான் வந்தபோது அவர் சாதாரண உடையிலிருந்ததால் அந்தத் தழும்பும் சாயலும் வெகு நன்றாகத் தெரிந்தன. உனது சயன அறையில் எங்கள் கல்யாணத்தின் புகைப் படம் மாட்டியிருந்ததைக் கண்டதும் எனது சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. அதற்குமேல் என்னால் அங்கு நிற்கமுடியாது மனது தத்தளித்ததால்எங்கே என் மர்மம் வெளியாகிவிடுமோ என்கிறபயத்தால் உடனே ஓடிவிட்டேன்.

என்மனத்தவிப்பை அளவிட்டே கூறமுடியாது. நான் கோகுலத்திற்கே போய்விடலாமா என்றும் எண்ணினேன்... உனக்கு இந்த ரகஸியம் தெரியாதிருக்கவேண்டுமே என்றுபகவானை ப்ரார்த்தனை செய்தும் என்னைக் காட்டிக் கொடுத்து விட்டார். அமரா! உனக்கு நான் போட்டியாகாமலிருக்கவேண்டுமே.. சீக்கிரமாவது திருவடி சேர்க்கக் கூடாதா! என்று முறையிட்டேன். அம்முறையீட்டை பகவான் அங்கீகரித்திருப்பதைக் காண உள்ளம் பூரிக்கிறேன், அமரா!...அமரா!... என்னை வெறுக்காதே...... என்மீது கோபிக்காதே.......

என்று கூறியவாறு ஆவேசத்துடன் எழுந்து கோகுல்நாதனின் கால்களைப் பிடித்துக்கொண்டு சடாரென்று விழுந்து... ஸ்வாமீ!... என் னிதயக்கோயிலில் சதா வீற்றிருக்கும் தங்களை நான் நேற்று பார்த்து கொடியில் அறிந்துகொண்டேன்...



என்னுருயிர்த் தோழியின் கணவனாகவே பகவான் தங்களை நியமித்த பிறகு நான் இருவருடைய இன்ப வாழ்க்கையில் குறுக்கிட்டு நிற்காமல் பகவான் என்னைத் திருவடி சேர்க்கவேண்டுமே என்று அவரை இடைவிடாதுப்ரார்த்தித்தேன்...என் கோரிக்கை இப்போதே ஈடேறிவிட்டது. இந்த பரம ரகஸியம் இந்த இடத்தோடு சமாதியாகட்டும்...... பெரிய டாக்டருக்குக்கூடத் தெரிய வேண்டாம். ஏனெனில் தங்களிடம் உள்ள மதிப்பும் நம்பிக்கையும் குறைந்து விடும்...வழிப் போக்கி வந்தாள்; வழியோடு போனாள் என்றிருக்கட்டும் ... என்னுயுள்

முடிவதற்குள் ஒரு முறையாவது தரிசிக்கத் தவம் செய்தேன்...தரிசித்தேன்...இதே நிகரற்ற பாதத்தில் உயிரைவிடும் பாச்யமும் பெற்றேன்...'' என்று ஏதேதோ பேச மாட்டாது அதிர்ச்சியுடன் பேசி அப்படியே மீண்டும் மூர்ச்சித்து விழுந்தாள்.

என்னே ஆச்சரியம்!...என்னே அதிர்ச்சி!... அமரா தன் கணவனைப் பார்க்கிறாள்...அகிலாவைப் பார்க்கிறாள்...கோகுல்நாதனும் வாயடைத்துப்பதுமை போல் கல்லாய்ச்சமைந்தான். அகிலாவைத்தூக்கி மார்புரத் தழுவிக்கொண்டு மீண்டும் படுக்கையில்கிடத்தினான். அமராவின்பார்வை 'நீ குற்றவாளி...பரம குற்றவாளி... பயங்கரமான அபராதி'......என்று குத்திக் காட்டிக் கூறுவதுபோல் தோன்றுகிறது...''அமரா !.....மன்னிக்க முடியாத குற்றவாளி நான் என்பதை ஒப்புக்கொள்கிறேன். பலவருடங்கள் தேடித்தேடி அலுத்த பிறகே இவளுடைய ஆசையை நிராசை என்று விட்டு மறந்தேன். என் தகப்பனாருக்கும் எனக்கும் உண்டான மனஸ்தாபத்தால் ஓடிய நான் வருஷக்கணக்கில் வெளியூரிலேயே பெரும் பதவிப் பெற்றுப் பிறகு தாய்நாடு திரும்பியதில் சகலமும் தலைகீழாக மாறிவிட்டது. கைவிட்டப் பண்டத்தை நினைத்து வருந்திப் பலனென்ன என்று எண்ணிச் சில வருஷமாகத்தான் அறவே மறந்து உன்னையடைந்தேன். என்னை மன்னித்துவிடு...

அகிலா...அகிலா!...என்னை மன்னித்து, உன் பக்ஷமான குணத்தால் என்னிதயத்திற்குக் கடுகளவாவது சாந்தியைக் கொடு. நான் செய்த குற்றம் மலையளவுதான் என்பதை நான் உணர்கிறேன். மகத்தான மலையையும் ஒரு சிறு உளி தகர்த்து விடுவதுபோல் உன் க்ஷமா என்னை ரக்ஷிக்கட்டும்...என்று வேண்டிக் கண்ணீர் வடித்தான்.

ஆனால் அமராவின் சிந்தனைகள் சிறகடித்துப்பறக்கின்றன. தன்னாருயிர் அகிலாவின் கஷ்டம் விடிந்து சுகப்படப்போகிறாளா என்றுதான் ஆதியில்ஏங்கியதுபோக, கஷ்டம் விடியும்காலம் வந்தும் விடியாமலேயே போய்விடுமோ...என்கிற திகில் பிடித்துக்கொண்டது.

கணவன் முகத்தைக் கடுமையான உணர்ச்சியுடன் ஒருமுறை பார்த்தாள். ''டாக்டர்! கட்டிய மனைவியிடம்கூட தனது ஜீவிய ரகஸ்யங்களை மறைத்து நாடகம் நடிக்கும் வீரர்களை நான் பார்த்ததுமில்லை; படித்ததுமில்லை; கேட்டதுமில்லை. இதைக் காண நான் ஆச்சரியப்படுவதோடு உங்கள் செய்கையை நான் வெறுக்கிறேன். அசந்து மறந்தாவது இவ்விஷயத்தைக் கூறியிருந்தால் நான் உடனே என்னாருயிர் நேசியைத் தேடிப் பிடித்து அவளுக்கு பகவானால் கொடுக்கப்பட்டுள்ள அன்பு பீடத்தில்...ஆனந்த ஆஸனத்தில் அவளை அமர்த்தி நான் கண்ணாரக் கண்டு களித்திருப்பேன்; தங்களுடைய அசட்டு மவுனம் கொலைக்கு ஒப்பாக முடிந்தது. நம் படுக்கையறையிலுள்ள புகைப்படத்தைத் தங்கள் சிநேகிதனுடையது என்று ஏன் பொய்சொல்லவேண்டும்? குடுமி முடிச்சும் சந்தனப் பொட்டும் பஞ்சகச்ச வேஷ்டியும் எனக்கு அடியோடு அடையாளம் தெரியாது செய்துவிட்டதால் நான் உண்மை என்று நம்பினேன். அகிலாவும் மிகச் சிறுமியாதலால் எனக்குப் புரியவில்லை...போனதைப்பற்றி இனி பேசி பொழுதையும் வீணாக்க நான் விரும்பவில்லை. என்னாருயிர்

அகிலா எப்படியாவது பிழைத்தால் போதும்'' என்று சுடச்சுட பேசிப் பின் அகிலாவை நோக்கி...

''அன்பே!... நீ முதலில் இப்படி படபடத்துப் பேசுவதே தப்பு... உம்... வாயை மூடிக்கொள்ளு. அன்று ஆஸ்பத்திரியில் பிரிந்த உன்னை மீண்டும் ஆஸ்பத்திரியிலேயே கண்டு களிவெறி கொண்டேன். உன் கணவர் உனக்குச் செய்த த்ரோகத்திற்கு நல்லவேளையாக பகவான் அந்த குற்றவாளியை தண்டிக்க என்னையே நீதிபதியாக நியமித்ததற்கு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். நீ வீணுக ஏதேதோ அசட்டுப் பிசட்டென்று பேசாதே. முதலில் நீ பிழைத்தால் அதுவே போதும். சாவு. சாவு. என்று கத்தாதே. இத்தனைநாள் நீ உயிருடன் இருந்தும் செத்தபிணமாகத்தானிருந்தாய்; இனிதான் நீ உண்மை ஜீவனைகப் பிறக்கப்போகிருய். நாம் தேனும் பாலும், பூவும் மணமும், சதங்கையும் ஒலியும்போல் ஒன்றுபட்ட மனத்துடன் வாழ்வோம்... பேசாமலிரு''...என்று ஒரு சட்டத்தை வீசினுள். அன்புமயமான அந்த வார்த்தை வலையில் அகப்பட்டுக்கொண்டதுபோல் மூர்ச்சையானுள் அகிலா.சற்று கழிந்து மீண்டும் தெளிந்து, அமராவைக் கட்டியணைத்தாள். ''எனக்குப் பேசவே தெரியவில்லை... என்னமோ செய்கிறது... அவரை அனியாயமாய் எதுவும்சொல்லாதே. என்விதியை நான் அனுபவித்தேன். அமரா... குழந்தை எங்கே....கொண்டுவா.....கொண்டுவா...''என்ருள். அமரா ஓட்டமாக ஓடினுள்......அகிலா தன்வைல்தீர கணவனைக் கட்டித் தழுவிப் பல... ''என்னப்பனே! நாராயணு!..என்னிடம் இத்தனை கருணையாவது காட்டியதற்கு என்னவிதமாகத்தான் தோத்திரம் செய்வேன்? ஸ்வாமீ! நான் தங்கள் மதிப்பைக் குலைக்கவோ.... என் ஆப்த சிநேகிதை யின் வாழ்வைக் கெடுக்கவோ முட்டுக்கட்டையாக ஆய்விடுவேனே என்று பயந்தேன்... பகவான் க்ருபைசெய்தார். என் ஆத்மா இனி கவலையின்றி ஆனந்தமாகச் செல்லும்... இந்த ரகஸியம் இதோடு மறையட்டும்'' என்று அவனிரு கரங்களையும் எடுத்துமார்பில் ஒத்திக் கொண்டாள்.

அமரா குழந்தையுடன் ஓடிவந்தாள். அகிலா குழந்தைக்குப் பல முத்தங்களிட்டுக் கட்டியணைத்தாள்; ''அமரா... கடவுள்மீது ஆணையாக நீ இந்த ரகஸியத்தை வெளியிடக்கூடாது. வழிப்போக்கி வந்தாள், போனுள் என்று மறையட்டும். என் சகோதரன் ஸாமிநாதன் ரத்னப்ராபாவின் ஆதரவிலிருப்பதை நான் கோகுலத்திலேயே அறிந்தேன், அவரவர் அப்படியப்படி க்ஷேமமாக விருந்தால்போதும் என்று நான் என்னிருப்பிடத்தைத் தெரியப்படுத்தவில்லை. என் வேஷமும் கருப்புக் கண்ணுடியும் என்னைக் காத்தன. ஏதோ இதய நோயால் இறந்தாள் என்ற ஒரே வார்த்தை உலகமறியட்டும்...நான் பரம சந்தோஷத்தை உன்னுலடைந்தேன்... நீ மனதில் வித்யாஸமாக நினைக்காதே...உன்னுல் அன்றும் இன்றும் நான் பேறு பெற்றேன்.....

என்று சொல்லும்போதே மூச்சு மறுபடியும் தூக்கியது......ஆத்மநாதன் அப்போது ஓடிவந்து பார்த்தார். இதயம் அடங்கிக்கொண்டு வருவதையறிந்து எத்தனை விதத்தில் சிகிச்சை செய்தும் உபயோகப்படவில்லை. ஆனுல் அமராவுக்குமட்டும் எப்படியாவது பிழைத்துவிடக் கூடாதா..வள்ளி, தெய்வானைபோல்

இருவரும் ஒன்ருக வாழலாமே...... என்கிற ஆசை அடித்துக்கொண்டது. ஆனல் ஆண்டவனின் செயல் வேறுவிதமாகவிருக்கையில் எப்படி நினைத்தபடி நடக்கும்?

## 48

இத்தனை சடுதியில் இப்பேர்ப்பட்ட மாறுதலையடைந்து பரம ஸாத்வீகமாக தன் கணவன் மாறியிருந்த போதிலும் ஸரஸாவுக்கு அகிலாவைத் தன் கணவனை கொலைசெய்துவிட்டதாயும் அந்த கொலைபாதகம் தங்களை வதைக்காது விடாது என்கிற ஒரு எண்ணம் மட்டும் அவள் இதயத்தில் ஆணி அறைந்தாற்போல் பதிந்திருந்தது. அந்தஎண்ணத்தை மறக்கவோ, மறைக்கவோ அவளால் முடியவில்லை. ஒவ்வொரு சமயம் அவளை மீறித் துக்கம் பொங்குவதைக்கண்டு சாமிநாதனே வியந்து, தான் செய்த முட்டாள்தனத்திற்காகவருந்துவான்

அன்று திடீரென்று ஒரு அவசரத் தந்தி ஸாமிநாதனுக்கு வந்தது.

'ஆபத்து.உன்சம்சாரம் குழந்தை சகிதம் சஞ்சீவிபுரத்திற்கு உடனே வரவும். உன் சகோதரி அகிலா சாகக்கிடக்கிருள்... கோவிந்தன்''

என்ற அதைப்படித்ததும் ஸரஸாவையும்ஸாமிநாதனையும் அப்படியே அலாக்காக ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு போவதுபோலிருந்தது. "என்ன! அகிலா உயிருடன் இருக்கிருளா! அவளுக்கு விபத்தா!... கோவிந்தன் என்பது யாராக விருக்கும்?...ஒருவேளை ஆதியில் நம்முடன் படித்த கோவிந்தனக விருக்குமோ...சஞ்சீவிபுரம் என்பது எங்கே இருக்கிறது...இதென்ன அதிர்ச்சியான விஷயம்"...என்று ஸாமிநாதன் இடிந்துபோய்விட்டான்.

ஸரஸா ஒருக்ஷணத்தில் குழந்தைகளுடன் கிளம்பி, கணவனையும் தைரியப்படுத்தி அழைத்துக்கொண்டு தானே முன்சென்று சஞ்சீவிபுரத்திற்கு டிக்கட்டுவாங்கி ரயிலேறிருள். அகிலாவைப் பார்க்கப்போகும் சந்தோஷ அலை ஒருபுறம் மோதுகிறது எனினும் அவளுக்கு ஆபத்து; சாகக்கிடக்கிருள் என்பதைக்கேட்டுமிக்க துக்கம் ஒருபுறம் பொங்குகிறது. இன்னிலைமையில் அவர்கள் ரயில் வேகத்துடன் போராடிக்கொண்டு ஸ்டேஷனை அடைந்தார்கள்.

ஸ்டேஷனில் கோவிந்தன் இவர்களுக்காகக் காத்திருந்து ஸாமிநாதனைக் கண்டுபிடித்து...ஸ்வாமீ !... என்னை உனக்கு நினைவுகூட இருக்கமுடியாது. உனக்கும் எனக்கும் முகம்பார்த்துப் பேசும் பாக்யங்கூட அற்றுப்போய் பல வருஷங்களாகிவிட்டன. நான் சஞ்சீவிபுரத்தில் ஆத்மநாதன் வைத்துள்ள ஆஸ்பத்திரியில் மருந்துகள் கலக்கும் கம்பவுண்டர் வேலையிலிருக்கிறேன். எங்கள் ஆஸ்பத்திரியின் போக்கே ஒரு அலாதியான முறையில் விசித்திரமாக நடக்கிறது.

அதில் சங்கீதம் ஒரு முக்ய அவுஷதமாகவிருப்பதால் பல பெண்மணிகள் காய்கிகளாய் கவுரவமாக வந்திருக்கிருர்கள். அவர்களில் உன் சகோதரியும் வடநாட்டுப் பெண் போல் வந்தாள். அந்த வேஷத்தில் எனக்குஅடையாளமேதெரியவில்லை நேற்றிரவு திடீரென்று மார்வலி உண்டாகி ப்ராணவஸ்தையில் விழுந்தபோது அந்த புதிய வேஷத்தைக் களைந்துவிட்டதும் நான் சடக்கென்று அடையாளம்கண்டுகொண்டேன். அப்போதே உனக்கு அவசரத் தந்தியடித்தேன்...முகத்திலாவதுவிழிக்கலாம் என்று......

என்று இழுப்பதற்குள் ஸரஸா ஆத்திரத்துடன் "ஐயா!" அகிலா இப்போது எப்படியிருக்கிருள்?... பிழைத்துவிட்டாளா...முதலில்அங்கு

அழைத்துச்செல்லும். பிறகு பேசலாம்"...என்று பதறினாள். ஸாமிநாதன், தான் அகிலாவுக்குச் செய்த கொடுமைகளை எண்ணி உள்ளம் உருகி ஒரே அழுகையாய் அழுகிறானேயன்றி கோவிந்தனிடம்பேசக் கூட அவனுக்குத் தெரியவில்லை. உடம்பு கிடுகிடென்று நடுங்குகிறது. தான் ஆண்டவனறிய குற்றவாளி; குற்றவாளி என்கிற உணர்ச்சியே அவனைக் குத்திக் கொலைசெய்கிறது.

சில விநாடிகள் தம்பித்து நின்ற பிறகு, "கோவிந்தா!...என்னால் பேசவே முடியவில்லை. நான் மகா கொலைபாதகன், பதிதன்...சகோதரத்ரோகி...குல நாசகன்...தாய் சொல் துறந்த சண்டாளன்...என்னைப்பற்றி நானே இன்னும் எத்தனை சொன்னாலும் போதாது...என் நெஞ்சு ஆறாது...என்னிதயக் குமுறல் தீராது...என் செல்வ அகிலா என்னைப்பற்றி ஏதாவது சொன்னாளா! இத்தப்பாவியை அவ்வுத்தமி வயிறெரியச்சபித்தாளா!" என்றான்.

கோவிந்தன் "உம்...அப் புனிதவதியின் வாயால் ஒரு அவச்சொல் கூட வரவில்லை. நீயும் உன் குடும்பமும் ரத்னப்ரபாவின் ஆதரவில் க்ஷேமமாயிருந்தால் போதும் என்றும் தன்னைப் பற்றி ஒன்றுமே தெரிவிக்க வேண்டாமென்றும்தான் கூறினாள். இன்னொரு ஆச்சரியம் சொல்ல மறந்துவிட்டேனே. அகிலாவின் கணவர் கோபாலன். கோகுல்நாத் என்ற வடநாட்டுப் பெயருடன் பெரிய டாக்டராய் எங்கள் ஆஸ்பத்திரியிலேயே வேலையாயிருக்கிறார். அவரை எனக்குப் புரியவே இல்லை. அகிலா பார்த்தவுடனே புரிந்துகொண்டுவிட்ட அதிர்ச்சியினால்தான் இதயம் தாங்காது அயர்ந்து விட்டது என்று டாக்டர் கூறினார்...இன்னொரு அதிசயம். அதே கோகுல்நாதனை அகிலாவின் ஆருயிர்த்தோழியாகவிருந்த அமராதான் மணந்திருக்கிறாள். இருவரும் அகிலாவை மடிமீதுதான் கிடத்திச் சிகிச்சை செய்கிறார்கள்...

இதைக்கேட்டவுடனே இருவருக்கும் உண்டாகிய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை..."அமராபாயும் இங்கிருக்கிறாளா!" என்று ஸரஸா அடங்காத ஆவலுடன் கேட்டாள்... ஸாமிநாதனுக்கு மறுபடியும் வாயடைத்து விட்டது. "அகிலாவின் கணவனா... அமராபாயா!...ஐயோ... நான் அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்?...எவ்விதம் என் குற்றத்தை மறப்பேன்?' என்று துள்ளுகிறான். அவன் கால்கள்மட்டும் நடக்கின்றனவேயன்றி இதயத்தில் செய்யும் சங்கடத்தை அளவிட்டுக் கூறமுடியாது...

## 49

சூரியன் எங்கேயோ ஆகாயத்திலிருக்கிறான்; ஆனால் பாதாளத்திலுள்ள தாமரை அந்த கிரணங்களைக் கண்டவுடனே மலர்ந்து மகிழ்ச்சி மயமாய் காட்சியளிக்கவில்லையா! இவ்வுலகத்தில் நீங்களெல்லோரும் சந்தோஷமாயிருக்கும் சுகவாழ்க்கையை நான் இதயம் பூராக நிரப்பிக் கொண்டு அவ்வுலகத்தில் ஆனந்தமாகக் காலத்தைக்கழிப்பேன்...எனக்காக யாரும் பொட்டுக் கண்ணீர்கூட வடிக்கக் கூடாது. எனது ஆத்மா சாந்தியாய் சாச்வத ஆனந்தப் பூர்த்தியுடன் இருக்கவேண்டுமானால் நீங்கள் சந்தோஷமாக என்னிடம் உட்கார்ந்திருங்கள்...என்று திக்கித் திணறியவாறு அகிலா கூறுவதைக் கேட்ட யாரால்தான் சகிக்கமுடியும்?...

அகிலா பெரிய டாக்டரிடம் ஓடினாள்..."டாக்டர்!...இனி உபயோகமில்லையா?"...என்று கதறினாள்...

பெரிய டாக்டருக்கும் விஷயம் நன்றாகப் புரிந்துவிட்டது. "நான் என்ன செய்யமுடியும்!... அவள் இதயம் அளிந்த புண்ணாகிவிட்டது. துடி துடித்துக்கொண்டிருந்த அவள் திடீரென்று தன் வாழ்நாளில் இனி பெறமுடியாது...கண்ணாலும் காண முடியாதென்கிற நம்பிக்கையுடன் நிராசைப் பதுமையாகவிருந்தாள். அத்தகைய நிலைமையில் திடீரென்று உங்களிருவரையும் பார்த்துவிட்ட அதிக சந்தோஷமே இதயக்கோளாறாகிவிட்டது. மனித ப்ரயத்தனத்தில் ப்ரயோஜனமேஇல்லை. ஏதோஒரு தெய்வகக்தி...மிறகல்(Miracle) என்கிறார்களே! அதுபோல் ஏதாவது நடந்தால்தான் என்னமோ! இரவே தாங்காது என்று பார்த்தேன். இதுவரையில் உயிர் இருப்பதே ஆச்சரியந்தான்...உலகத்தில் மனிதர்களே மனிதர்களைக் கொன்றுவிடுவதென்கிறதில் இந்த சம்பவம் ஒரு உதாரணம்"...என்று வருத்தப்பட்டார்.

அமராபாயினல் தாங்கமுடியாது மீண்டும் ஓடிவந்தாள். கோகுல்நாத் அகிலாவைத் தூக்கி தன் மடியில் கிடத்திக்கொண்டான். ஊமையிலும் ஊமையாகிவிட்டான். அழுது அழுது முகம் வீங்கியது. அகிலாவின் முகத்தோடு முகம்பதித்தான்...அவள் இதயம் ஆனந்தத்தினல் நிரம்பி முகம் பூரித்துக் காக்ஷியளிப்பதைக்கண்டு அவளை மகிழ்விக்க அவன் விரும்புவதுபோல் அவள் கரங்களை விடவேயில்லை. "அகிலா!...என்று கூப்பிட்டான்..."ஸ்வாமீ!...என் வாழ்வில் எனக்கிந்த ஒரு இன்பம் பெருங்கடல்போல் பொங்கிவிட்டதே போதும். எனக்கு வேறு ஒன்றுமே வேண்டாம்...என் குருவாக விளங்கிய மீராதேவிக்கு எனது வந்தனத்தைத் தெரிவியுங்கள்"....என்று கூறும்போது ஸரஸாவும் ஸாமிநாதனும் இவர்கள் சற்றும் எதிர்பாராதவிதம் அங்கு ஓட்டமாக ஓடிவந்து "அக்கா!......என்னுருயிர் அக்கா! அகிலா...இப்பாதகனை மன்னிப்பாயா...என்று இருவரும் கதறிக்கொண்டு அவளைக் கட்டித் தழுவினார்கள். அகிலாவின் அதிர்ச்சி பின்னும் பன்மடங்காகி திடீரென்று பெருகிவிட்டதால் கண்களை அகல விழித்துப் பார்த்தாள்... "மன்னீ!... அண்ணா...என் செல்வக் கண்ணா!"...என்று கூறினாள்... அடுத்த வார்த்தை சொல்வதற்கு முடியாது ஆயாஸம் மேலிட்டு மூச்சு வெகுவேகமாகத் துரத்தியது...

எல்லோருடைய இதயங்களிலும் கடும்புயல் அடித்துத் துக்கத் தீயைக் கிளப்பிவிட்டது... சற்று நேரம்.உயிர்போய்விட்டதுபோலவே கிடந்த அகிலா மீண்டும் கண்திறந்தாள்... அமராவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு "அமரா... அழாதே... நான் இப்போது எவ்வளவு சந்தோஷத்துடன் இருக்கிறேன் என்பது உனக்குத் தெரியவில்லை. நான் இப்போதடைந்துள்ள ஆனந்தத்தை இனி பிழைத்தால்கூட ஒருபோதும் அடையமாட்டேன் இது நிச்சயம்... அமரா...ஒரே ஒரு வேண்டுகோள்... அந்த அந்தகனின் ரிகார்டை ஒரு தரம்வைத்தால்...ஆஹாஹா...அந்த அமுதப்ரவாகத்தில் மிதந்தபடியே உயிர் விடுவேன்...

என்று முடிப்பதற்குள் அமரா ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தனது காரையனுப்பி அந்தகனையே அழைத்துவர உத்திரவிட்டாள். அடுத்த க்ஷணமே ப்ளேட்டும் வைத்தாள். மூடிய கண்களைத் திறக்காமல் அந்த கானமுதம் பருகிக்கொண்டே இருந்தாள். சிலமணி நேரத்திறகெல்லாம் அந்தகனே

நேரில் பாடுவதைக் கேட்டு அகிலாவின் கண்கள் விரிந்தன..."அவர் நேரில் பாடுகிறாரா...எங்கே...அம்மகானுபாவனை இங்கு அழைத்துவா அமரா! எங்கே அந்த அருள் காயகன்?"...என்றாள்.

அந்தகன் அகிலாவின் படுக்கையருகில் வந்து..."அம்மணீ!...என் சங்கீதம் உங்களுக்குச் சஞ்சீவியாக அமையவேண்டுமென்று பகவானை ப்ரார்த்திக்கிறேன். உயிர் போய்விடுவதால் ஒரு பயனுமில்லை. உலகத்திலிருந்து பிறர்க்குழைத்துத் திருப்பணியாற்றி ஆண்டவனுக்குமுகோல்லாசமாயிருந்து பின் மறைவதுதான் நலம்"...என்று தனது மலர்ந்த வதனத்துடன்,வெளுத்த இதயத்தடன் கூறினான்.

ஒரு சோகச் சிரிப்பு சிரித்தாள். அந்தகனின் வார்த்தையும் அந்தகமாக இல்லாமல் அதில் அர்த்தம் புதைந்து த்வனிப்பதைக்கண்டு எல்லோரும் மெய்மறந்தார்கள். அந்தகன் அருகிலேயே கானமழை வர்ஷிக்க உட்கார்ந்தான். அவனுடைய இன்னிசையின் நாதம் வெகு மதுரமாய்ப் பொங்கி எழுந்து எல்லோருடைய இதயத்தின் அடித்தகட்டில்போய் தொட்டு உணர்ச்சிக் கனலைப் பரப்பி ஆனந்த நிர்த்தனம் செய்யவாரம்பித்தது. அகிலாவும் "ஆஹா!...என்ன அத்புதம்...ஆஹா ச்ச்சுசு...என்று தன் ஆனந்தத்தை வெளிக்கிளப்பியவாறு மெய்மறந்து அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அந்த வேகத்தில் தனது பழங்காலத்திய சம்பவங்களை அவளால் நினைக்காமலிருக்கமுடியவில்லை. "இதே கானமழையில் நான் மெய்மறந்து திளைந்ததற்காகத்தானே அண்ணனால் கடுமையாக தண்டிக்கப்பட்டேன். ஒருவேளை இப்போது பார்த்தாலும் அண்ணன் அதேமாதிரிதான் அவதூறு பேசுவானோ என்னவோ!" என்று அப்போதும் நினைத்தாள்.

அவளது முகத்தில் ஜ்வலிக்கும் தேஜஸைக் கண்டு கோகுல்நாத்தின் உள்ளம் பூரித்தது. எனினும் துக்கக் கனலின் ஜ்வாலையைப் பொறுக்க முடியவில்லை!...அவன் உள்ளத்தில் செய்யும் சித்திரவதையைச் சொல்லி முடியாது...திடீரென்று எதையோ எண்ணி ஆவேசம் வந்தவளைப் போல் அமரா துள்ளிக் குதித்தவாறு கோகுல்நாத்தின் தோள்களைப் பிடித்து உலுக்கி..."டாக்டர்! எழுந்திருங்கள். எழுந்திருங்கள்... இப்போதுதான் நினைவிற்கு வருகிறது...மாருதி ஆதியில் கொண்டு வந்த சஞ்சீவியைப்போன்ற ஒரு பரம ஔஷதம், புதிதாய்க் கண்டு பிடித்திருப்பதாகவும் அதை ஒரு ப்ரபல டாக்டருக்கே அபாயகரமான நிலையில் உபயோகித்துப் பூர்ண குணமடைந்திருப்பதாயும் சொன்னீர்களே! அந்த மருந்தை உடனே வரவழைத்து என் ஆருயிர் நேசிக்குக் கொடுத்து அவளைப் பிழைப்பிக்கச் செய்தாலன்றி என்னுயிரும் நிலைக்காது. ஒரு விளக்கு எரிவதற்கு அகல், திரி, எண்ணெய் மூன்றும் உண்டானால்தான் ப்ரகாசம் உண்டாகும். நீங்கள் அகல் அவள் எண்ணெய்; நான் திரி. அந்த எண்ணெய் வற்றிவிட்டால் சிறிது நேரத்தில் திரி அதுவாகவே அணைந்து வெற்று அகல்தான் நிலைக்கும், ஆகையால் தாங்கள் உடனே எந்த பாடாவது பட்டு அம்மருந்தைத் தருவித்து இவளை பிழைப்பியுங்கள். உம்...இதோ பெரிய டாக்டரிடமும் சொல்லிவருகிறேன்."

என்று பதறி ஓடினாள். ஸரஸாவின் மடியில் அகிலாவைக்கிடத்தி

விட்டு கோகுல்நாத்தும் அடங்காத மகிழ்வுடன் ஓட்டமாக ஓடினான். ஆண்டவனே! தேடப்போன மூலிகை காலில் சுத்தியதுபோல் அம்மருந்து அகப்பட்டுவிடாதா என்று ஸாஸாவின் உள்ளம் உள்ளன்புடன் ப்ரார்த்தனை செய்தது.

## 50

வெகு விரைவில் ஒரு மாதம் உருண்டோடியது. அமராபாயின் தடபுடலும் அதிகாரமும் ஒரு சிற்றரசி அரசாட்சி செய்வதுபோல் ப்ரமாதப்படுகிறது...“உம்....நான் சொல்கிறபடிதான் நீ கேட்கவேண்டும்...நீ இனி என் கையிலடங்கிய சரக்கு..பத்திரம்...வீணை உடம்பை அலட்டிக்கொள்ளக்கூடாது. இனி நான் உன்னை அகிலா என்று அழைக்கமாட்டேன். அக்கா என்றுதான் அழைப்பேன். “என் சட்டத்திற்கு மீறினால்...தெரியும் சேதி”... என்று அடக்கமுடியாத சந்தோஷத்துடன் கூறி அவள் கன்னத்தை லேசாக வருடி முத்தமிட்டாள்.

அப்பப்ப!...நீ மகா பொல்லாத மனுஷி. ஆதியில் அனுமானைக நீதான் பிறந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் என்னை இப்படி குரங்காட்டம் ஆட்டுவாயா...அந்த ஸஞ்ஜீவியை கையாள நான்தானா கிடைத்தேன்..” அந்த டாக்டர் பிழைத்தார் என்றால் அவரால் உலகத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பிழைக்கும் லாபமிருக்கிறது. என்னை ஏன் நீ ஆட்டங்காட்டவேண்டும்?...அதோடு விடாமல் என்னை அடக்கியாளவும் வந்துவிட்டாய்.

அமரா! நீ எது சொன்னாலும் நான் கேட்கத் தடையே இல்லை. ஆனால் ஒன்று...ஏதோ நான் செய்த பாவத்தின் கொடுமையால் பிழைத்துக்கொண்டாலும் என்னை ஒரு பண்டமாக மதிக்கும்படிச் செய்த என் குருவாகிய மீராதேவியிடம் என்னை உடனே அனுப்பிவிடு. அந்த பழனம்ருத சாகரத்தில் திளைந்து என் வாழ்நாட்களை இன்பமயமாகக் கடத்திவிடுகிறேன். அதற்குமட்டும் என்னை நீ தடையே சொல்லக்கூடாது. சத்தியமாக நான் கேட்பதைப் பூர்த்தி செய்வதாக வாக்குக்கொடு.” என்று ஒருவித ஆவேசத்துடன் கேட்டாள்.

அதே சமயம் தபால்காரன் கொடுத்த கவரை ஒரு நர்ஸ் கொடுத்தாள். அதை அமரா ஆவலுடன் பிரித்து உரக்கப் படிக்கலானாள்.

“அன்புமிக்க புஷ்பாவுக்கு ஆசீர்வாதம். உபய க்ஷேமங்கள். உலகத்தில் பூகம்பத்தை பயங்கரமாக உண்டாக்கி பகவான் காட்டியிருப்பதின் மர்மத்தை, அதிசயத்தை, நீ இப்போது அறிந்திருக்கலாம். ஒரு பக்கம் அழிந்தால் ஒரு பக்கம் புதைந்து மறைந்துபோயிருந்த கட்டடங்கள் வெளிப்படுவதுபோல் உன் வாழ்க்கையிலும் அணையவிருந்த விளக்கு மீண்டும் ப்ரகாசிப்பதை உன் பெரிய டாக்டர் எழுதிய கடிதத்தின்மூலம் அறிந்தேன். நீ மீண்டும் என்னிடமே வந்துவிட வேண்டுமென்று எங்கே சொல்வாயோ? என்கிற முன்யோசனையினால் நானே உனக்கு எழுதுகிறேன். உன்னை வேண்டுமென்று உன் கணவன் கொடுமைசெய்து விலக்கி அலக்ஷியம் செய்திருந்தானானால் அவனிடம் நீ மறுபடி வாழ்க்கை நடத்த மனமிசையாதுதான். ஆனால் உன் விஷயத்தில் நீ கேவலம் சிறுமியாயிருந்த காலத்தில் பெரியவர்களின் கொடுமையால் பிரிய நேர்ந்தது. ஏதோ நற்காலத்தினால் மீண்டும் எல்லாம் நன்மையாகவிருக்கும்போது நீ பழயபடியிருப்பது சரியல்ல. பகவானின் கட்டளை அவன்வகுத்துள்ள



குடும்பத்திற்குப் பணிசெய்து உன் அரிய கானத்தினால் மக்களின் பிணியைநீக்கி, அவர்களையும் மகிழ்வித்து நீயும் சுகப்படு...வீணாக ஓடி வராதே... இங்ஙனம்

உன் பிரியமுள்ள

மீராபாய்"

இதைக்கேட்டதும் அவளுக்குப் பெரிய ஏமாற்றமே முதலில் உண்டாகியதனால் முகம் மாறியது.

அமராவோ கடகடவென்று நகைத்தவாறு..."பார்த்தாயா நியாயத்தை கடவுள் என் பக்கந்தான் இருக்கிறார். இனி இந்தஅசட்டு யோசனையை அறவேவிட்டுவிடு" என்றாள். அகிலா வாயே திறக்காது மவுனம் சாதித்தாள். யோசனைகள் பலமாய் எழுந்ததால் கண்மூடி மவுனிபோல் படுத்திருந்தாள். அவளைத்தொந்தரவு செய்யக்கூடாதென்று அமரா வெளியேபோய்விட்டாள்.

அதே சமயம் அமராவின் கணவன் அங்கு வந்தான். இவளுடைய மவுன நிலைமையைக்கண்டு வியந்தவனாய் மண்டியிட்டு உட்கார்ந்தபடியே கண்ணைமூடியுள்ள அவள் முகத்தை லேசாய்த் தடவியவாறு கேசங்களைக்கோதி அந்த அழகிய கன்னங்களில்......

சடக்கென்று கண்ணைத்திறந்ததும் நாணத்தினால் மெல்லக் கவிழ்ந்தது......"உம்....இந்த......சேஷ்டைகளையெல்லாம் வென்று ஒரு நிலையான வைராக்யத்தை அடைந்துவிட்டதாகஎண்ணிய நான் முற்றிலும் தோற்றுவிட்டேன். மாற்றமுடியாத மாறுதலடைந்து என்னையே நான் வியக்கும்படியாகிவிட்டது. எல்லாம் இந்த அமராவின் வேலைதான்" என்று அன்பு தேங்கக் கூறினாள்.

"ஆம்! அமரா என்கிற பெயர் அவளுக்குத்தான் பொருந்தும். அம

ரத்வம் நிறைந்த அவளுடைய அப்பழுக்கற்ற உயர்ந்த குணத்தின் ப்ராகாசந்தான் இப்போது நம்மை இந்த நிலையில் வைத்திருக்கிறது. இனிமேல் நம் ஆயுள்வரையில் இது நிலைக்கவேண்டும்'' என்றான்.

"இனி நிலைக்காமல் ஏன் போகும்? அப்படிப் போகுமானால் நான் கடவுளை இலேசில் விட்டுவிடுவேனா! ஸாவித்திரி தன் கணவன் உயிரை எமனுடன் போராடி மீட்டுவந்தாள். நானோ! என் கணவரின் மனைவியினுடைய உயிரை எமனிடமிருந்து மீட்டுக் கொண்டு வந்துவிட்டேன். எனக்கு இத்தனை சகாயம் செய்த கடவுள் இனி குறைவு செய்வாரா என்ன?'' ... ... என்று கூறிக் கொண்டே குழந்தையுடன் திரும்பி வந்த அமராவைப்பார்த்த இருவரும் வெட்கத்துடன் தலை குனிந்தபடியே சிரித்தார்கள்.

"அம்மா! பரதேவதே!... உன் ப்ரபாவம் எனக்கு இப்போதுதானா தெரியும்... முன்பே தெரியும். யாருக்கும் பயப்படேன் ஆண்டவனே! ஆனை குதிரை வந்தாலும் தாண்டுவனே! என்கிற பழமொழியை உனக்காகத்தான் செய்து வைத்தார்கள். இரு இரு... என்னை அதிகாரம் செய்து சட்டம் செலுத்தும் உன்னை நான் மட்டும் இலேசில் விட்டு விடுவேனா?...

என்று அவள் உறுமியவாறு அமராவைக் கட்டியணைத்து முத்தமிட்டு "அமரா! ஆதியிலும் நீ என்னுடைய இருண்ட வாழ்க்கையில் இன்ப ப்ரகாசத்தை உண்டாக்கினாய். அந்திமத்திலும் வாடி வதங்கி விட்ட புஷ்பத்தை உனது பவித்திரமான அன்பின் கிரணத்தால் மலர்ந்த இதழாக்கி நறுமணங்களை அள்ளி வீசிவிட்டாய்... உத்தமி என்றால் நீயல்லவா உத்தமி!''

என்று முடிப்பதற்குள், "ஆம்... ஆம்... அதில் சந்தேகம வேறு இருக்கிறதா? முட்டாள் என்றால் நானல்லவோ அடி முட்டாள்''... என்று கூறிய கணவனைக்கண்ட அமரா கலகலவென்று சிரித்தாள். "இனி கடந்துபோன விஷயம் எதையும் குறைகூறிப்பேசவே கூடாது. அம் மாதிரி பேசினால் எனக்கு மகா கோபம் வரும்.'' என்று மிரட்டும் சமயம் ஆத்மநாதன் வந்தார்.

"அம்மா! தாயே! இதயம் இத்தனை மோசமாக நின்றுவிட்டபிறகு அது உயிர்பெற்று எழுந்த விந்தையை நான் உன்னிடந்தான் கண்டேன். பகவான் இனி ஒரு கோளாறும் இல்லாது நன்றாக வைக்கவேண்டும்.'' என்று வாழ்த்தினர்.

சிலம்பரதங்கள் சாமிநாதனும் ஸரஸாவும் கூடவிருந்து பிறகு ரத்னப்ரபாவின் ஆதரவுக்கே போய் விட்டார்கள். கோகுல்நாதனின் பாடுதான் இப்போது மிகவும்திண்டாட்டமாகிவிட்டது. ஒருத்தி சொக்காயை மாட்டினால்; ஒருத்தி பூட்ஸை மாட்டுகிறாள். ஒருத்தி தலையை வாரினால் ஒருத்தி முகத்தில் பவுடரைப் பூசுகிறாள். முருகக்கடவுள் இப்படித்தான் அன்புத்தளையில் அகப்பட்டுக் கொண்டு திளைந்தாரோ! என்று எண்ணி உள்ளம்பூரித்தான். புஷ்பாவதியின் விசித்திரமானவிஷயங்களை அறிந்த மீராதேவியும் உள்ளம்பூரித்தாள். கோகுல்நாதனும் அவன் மனைவியும் தனித்துப் பேசி இன்புற்றிருப்பதை மறைந்துபார்த்து இன்பமடைவதில் அமராபாயிக்கு ஒரு தனித்த ஆர்வம், ஆசை, ஏன்... அதில் ஓர் தனி இன்பத்தைக்கூட அவள் உள்ளம் உணர்ந்தனுபவித்து அதுவே அவளுக்கு நித்யகல்யாண வைபோக சுகமாய்த் தோன்றி பூரிக்கச்செய்தது...

சுபம்! மங்களம். சுபம்!!

18301

கீதாசாரியனின் கிருபையால் மலர்ந்த இதழ் என்கிற கதை இவ்விதழு
பூர்த்தியாகி அடுத்த இதழில் ஆசை ப்ரவாகம் என்கிற புதிய கதை
ம்பமாகப்போகிறது. வழக்கம்போல் மோகினியின் அன்பர்கள் தம்
பிலாத பேராதரவையும் அன்பையுமளித்து எனக்கு உத்ஸாகத்தைக்
டுக்கக்கோருகிறேன்.

தங்கள் நன்றியுள்ள

வை. மு. கோதைநாயகி.

---

## முக்கிய அறிவிப்பு

சந்தா அனுப்புவோர் ஒரு வருடத்திற்குக் குறைந்து அனுப்பக்கூடாது
பதை கவனிக்கவும். சில்லரை சில்லரையாக அனுப்புவதால் கணக்கு
த்துக்கொள்வதில் வீண் சிரமமேற்படுவதுடன் பின்னர் சஞ்சிகை
டைக்குமென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. —மானேஜர்.

---

சிறுவர் அறிவு வளர்ச்சித் தொகுதி

# பாலர் மோகினி

## குழந்தைகளுக்கென்றே குட்டி புத்தகங்கள்

*முதல் புத்தகம் இம்மாதக் கடைசியில் வெளிவரும்*

**முதல் புத்தகத்துக்கு விஷயதானம் செய்துள்ளவர்கள்:-**

ஸ்ரீ காஞ்சீ. ப்ர. ப. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி
கவியோகி சுத்தானந்த பாரதி
பி. ஸ்ரீ. ஆசார்யா,
காப்டன் என். சேஷாத்திரிநாதன்
பி. ஆர். ராஜசூடாமணி
வை. மு. கோ.


படங்கள்—ராகவன்

பதிப்பாசிரியர்: வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்.

உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்தாயிற்றா? தனிப்பிரதி அணா 6. தபால் மூலம் அணா 7. பார்த்திப வருடத்தில் மொத்தம் 6 புத்தகங்கள் வெளிவரும். ரூ. 2—4—0 முன்பணம் அனுப்புவோருக்குத் தபாற் செலவு இனாம். காகிதக் கட்டுப்பாட்டினால் குறைந்த பிரதிகளே வெளியிடுவதால் உடனே முந்துங்கள்.

All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no reference whatsoever to real persons.
JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil
JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge: V. M. SRINIVASAN, M.A., B. L.

Jaganmohini (May 1945) Regd. No. M. 2210



# பெண்களுக்கு சுயநலமற்றதும் கௌரவப்படுத்தக் கூடியதுமான சுயேச்சை வாழ்க்கை

ஒரு பெண் சோம்பேறியாய் வீட்டோடு இருப்பதை சமூகம் விரும்பவில்லை. தற்கால புத்திசாலி பெண்ணான உனக்கு இந்திய ஆக்ஸிலியரி நர்ஸிங் ஸர்விஸில், மனதை ஆகர்ஷிக்கக் கூடியதும் சுவாரஸ்யமானதும் உபயோகமுள்ளதுமான வேலைகள் இருக்கின்றன. "கருணையின் தேவதூதர்கள்" அடையாளமான வெண்மை நிற குல்லாயும் ஏப்ரனையும்விட வேறு எந்த உடுப்பும் அதிக கௌரவத்தை அனுபவிக்கவில்லை.

ஏ. என். எஸ்ஸில் பெறும் முதல்தரமான பயிற்சி யுத்தத்திற்குப் பிறகு உங்களுக்கு சிவில் நர்ஸிங்கில் வெற்றிகரமான வாழ்க்கையை அளிக்க சுலபமாக இருக்கும். உங்களுக்கு வேறு யோசனைகள் இருந்தால், நீங்கள் பயிற்சி அடைந்த வைத்திய அறிவு உங்கள் குடும்ப வாழ்க்கை அல்லது தேசத்தின் சமூக சேவைக்கு மதிப்பு சொல்லக்கூடாததாக இருக்கும். இந்த சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.

தற்சமயம் ஏ. என். எஸ். சம்பளங்கள் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக பொது சேவையின் புது சம்பளங்கள். இலவச இடவசதி, சாப்பாடு, வேலையாட்களுடன் கூட மாதம் ரூ. 135 முதல் 175 வரை, அல்லது மாதம் ரூபாய் 203 முதல் 243 வரை. வேலைக்கு பிரிட்டிஷ் பிரஜை அல்லது இந்திய சமஸ்தான பிரஜையாயும் 17 முதல் 45 வயதுக்குள் இருக்கும் எந்த பெண்ணும் சேரலாம். முன் அநுபவம் தேவையில்லை. ஆனால் நர்ஸிங் அநுபவம் உள்ளவர்கள் வேலையில் உயர்ந்த கிரேடில் சேரலாம். நர்ஸ்கள் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள். சாதாரணமாக, அவர்களாகவே மேல் நாட்டுக்குப்போவதாகசொன்னாலொழிய, எல்லோருக்கும் இந்தியாவிலேயே வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

# ஏ.என்.எஸ்

## பெண்ணிற்கு மிகவும் கம்பீரமான வேலை

**பூரா விவரங்களுக்கு**

—:::—

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் லேடி ஸூபரின்டென்டெண்ட் அல்லது டைரக்டர் ஜெனரல் இந்திய மெடிகல் சர்வீஸ், நியூ டில்லிக்கு இவர்களுக்கு எழுதுங்கள்.

AAA. 1197. A. TM.